# பரிபூரண ஜீவன்

# PARIPOORANA JEEVAN



## என் தேவனுடைய கரம் என்மேல் நன்மையாக இருக்கிறது

TAMILNADU ASSEMBLIES OF GOD NEWS MAGAZINE

January - February 2020
Volume : 60

ஆண்டு சந்தா ₹ 100/-
Issue : 1

## ஆண்கள், வாலிபர் முகாம் - தேனி மண்டலம்











## வாலிபர் முகாம் - இராதாபுரம் மண்டலம்





## சிறுவர் முகாம் - நாகர்கோவில்












ஆசிரியரிடமிருந்து........!

# தேவனுடைய கரம் என் மேல் நன்மையாக இருக்கிறது

நெகேமியா 2 : 18

கிறிஸ்துவுக்குள் பிரியமான பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு 2020 ஆண்டு புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்! கர்த்தர் உங்கள் ஒவ்வொருவரையும் தம்முடைய கரத்தினால் ஆசீர்வதித்து வழிநடத்துவாராக!

‘தேவனுடைய கரம்’ மகா உன்னதமான ஆசீர்வாதங்களையும் நன்மைகளையும் நமக்கு அளவில்லாமல் அள்ளித் தருகிறது. அவரது கரம் தரும் நன்மைகளை வேதம் முழுவதிலும் நாம் காண முடியும். தேவனுடைய கரம் என்பது நம்முடைய தேவனின் வல்லமை, ஆளுமை, அதிகாரம், பிரசன்னம் ஆகியவற்றை குறிக்கிறது. வேதம் முழுவதிலும் ‘கர்த்தருடைய கரம்’ என்ற பதம் 39 இடங்களிலும், ‘தேவனுடைய கரம்’ என்கிற பதம் 16 இடங்களிலும் வருகிறது. இந்த இடங்களில் தேவனுடைய கரம் இரண்டு விதங்களில் வெளிப்படுவதை நாம் காண முடியும். ஒன்று, தேவ ஜனங்களை ஆசீர்வதிக்க தேவ கரம் நீட்டப்படுகிறது. இரண்டாவதாக, எதிரிகளை முறியடிக்கவும், அவர்களுக்கு நியாயத்தீர்ப்பு கொடுக்கவும் வெளிப்படுகிறது. தேவ ஜனங்களாகிய நாம் இந்த 2020 ஆண்டு கர்த்தருடைய வழிகளில் நடக்கவும், அவரை நேசிக்கவும், தேடவும் தீர்மானிக்கும்போது நெகேமியா கூறுவது போல, தேவனுடைய கரம் நம்மேல் நன்மையாக காணப்படும்!

## விடுவிக்கும் கரம்

தேவனுடைய கரம், கை, புயங்கள் என்கிற பதங்களை முதலாவது யாத்திராகமத்தின் புத்தகத்தில் நாம் அதிகமாக காண்கிறோம். இஸ்ரவேல் புத்திரர் எகிப்தின் அடிமைத்தனத்தினால் தவித்துக் கொண்டிருக்கும்போது தேவனை நோக்கி முறையிட்டார்கள் (யாத்.2:23-25). அப்பொழுது தேவன் அவர்களை தம்முடைய வல்லமையான கரத்தினாலும் ஓங்கிய புயத்தினாலும் விடுவித்தார் (யாத்.6:6; உபா.5:15). எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் ஜனங்களை விடுவிக்க ஆரம்பத்தில் மறுத்தான். ஆனால் கர்த்தருடைய கரம் எகிப்தியர் மேல் செய்த தண்டனைகள், வாதைகள், இஸ்ரவேலருக்கு செய்த அற்புதங்களை அவன் கண்டபோது, அவர்களை விடுதலையாக்க அனுமதித்தான் (யாத்.3:19, 20; 9: 2, 3; 13:3; 15:6). ஆம் பிரியமானவர்களே, தேவன் இந்த ஆண்டு தம்முடைய கரத்தின்

வல்லமையில் உங்களை சகல கட்டுகள் மற்றும் அடிமைத்தனத்தி னின்றும் விடுவிப்பார். மேலும் இரட்சிக்கப்படாத உங்கள் குடும்பத்தினரையும் விடுவித்து இரட்சிப்பார்! இரட்சிக்கக்கூடாதபடிக்கு அவருடைய கரம் குறுகிப் போகவும் இல்லை (ஏசாயா 59:1).

## தேவைகளை சந்திக்கும் கரம்

தேவனுடைய கரம் தரும் நன்மைகளைக் குறித்து இரண்டாவதாக எஸ்றா, நெகேமியா புத்தகங்களில் வாசிக்கிறோம். தேவனுடைய கரத்தைக் குறித்து ஒன்பது இடங்களில் இந்த இரண்டு புத்தகத்திலும் வாசிக்கிறோம். எஸ்றா சிறையிருப்பிலிருந்து தாயகம் திரும்புகிறார். தேவனுடைய கரம் அவரோடு இருந்ததினால் அவர் கேட்டதையெல்லாம் ராஜா அவருக்கு கொடுத்தார் (எஸ்றா 7:6). மேலும் நெகேமியா எருசலேமிற்கு சென்று இடிந்த அலங்கத்தை கட்ட தீர்மானிக்கும் போது, ராஜா அவருக்கு அனுமதி கொடுத்ததோடு, அவருக்கு தேவையான அனைத்தையும் கொடுக்கக் கட்டளையிட்டார் (நெகே.2:8). கர்த்தருடைய கரம் எந்த மனிதனோடிருக்கிறதோ அந்த மனிதனின் வாழ்வு வித்தியாசமாக இருக்கும். அவனுடைய தேவைகளை கர்த்தர் அற்புதமாக சந்திப்பார். இருப்புத்தாழ்ப்பாள்களை முறித்து வெண்கலக் கதவுகளை உடைத்து ஒளிப்பிடத்திலுள்ள பொக்கிஷங்களையும் மறைவான புதையல்களையும் நமக்கு தருவேன் என்று வாக்குப்பண்ணியிருக்கிறார் (ஏசாயா45:4). எது எங்கு கிடைக்காது என்று நாம் மலைத்து நிற்கிறோமோ, எதை எவர் நமக்குத் தரமாட்டார்கள் என்று திகைத்து நிற்கிறோமோ அதை அந்த இடத்திலிருந்தே பெற்றுத் தர தேவனுடைய கரம் வல்லமையுள்ளது என்பதை மேல் குறிப்பிட்டுள்ள வசனங்கள் நமக்கு காட்டுகின்றன. நம்முடைய தேவைகளை சந்திக்க முடியாதபடி அவருடைய கரம் குறுகிப்போகவில்லை என்று எண்ணாகமம் 11:23 கூறுகிறது. தேவ ஜனமே, கர்த்தர் தம்முடைய கரத்தினால் உங்களை போஷிப்பார், பராமரிப்பார், திருப்தியாக்குவார் (சங். 145:16) ! ஆமென்.

## பாதுகாக்கும் கரம்

“தேவனுடைய கரம் எங்கள் மேலிருந்து, வழியிலே சத்துருவின் கைக்கும், பதிவிருக்கிறவர்களின் கைக்கும் எங்களை தப்புவித்தது” என்று எஸ்றா கூறுகிறார் (எஸ்றா 8:31). எஸ்றா, முதலாம் மாதம் பாபிலோனிலிருந்து புறப்பட்டு ஐந்தாம் மாதத்தில் எருசலேம் வந்து சேருகிறார் (எஸ்றா 7:8; 8:31). ஏறக்குறைய 900 மைல்கள், 150 நாட்கள் பயணத்தில் மனிதர்களால், மிருகஜீவன்களால், சீதோஷன மாற்றங்களால் எத்தனையோ இடர்கள் அவருக்கு ஏற்பட்டிருக்கக்கூடும். ஆனால் தேவனுடைய கரம் அவரோடு இருந்தபடியால் அவர் போய்ச் சேர வேண்டிய இடத்திற்கு தேவனுடைய கரம் அவரை பத்திரமாக கொண்டு போய்ச் சேர்த்தது. ஏசாயா 51:16-ல் ‘என் கரத்தின் நிழலினால் உன்னை மறைக்கிறேன்’ என்று கர்த்தர் கூறுகிறார். கர்த்தருடைய கரம் நம்மேல் இருக்கும்போது வியாதியோ, விபத்துகளோ, விஷப்பூச்சிகளோ, விழுங்கப்பார்க்கும் மனிதர்களோ நம்மை சேதப்படுத்த முடியாது (சங்.91:1-13; 57:3; யோவான் 10:27-29). தேவனுடைய பலத்த கரம் உங்களை எல்லா தீமைக்கும் விலக்கி பாதுகாக்கும் (சங்.121:7,8) மற்றும் வாழ்க்கை பயணத்தில் பத்திரமாக அக்கரைக் கொண்டு சேர்க்கும் (அப். 27:44; யூதா 24) !

## பயன்படுத்தும் கரம்

'கர்த்தருடைய கரம்' என்கிற பதம் மூன்றாவதாக எசேக்கியேல் புத்தகத்தில் அதிகமாக (ஏழு முறை) காணப்படுகிறது. கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் குறித்து ஒரு உன்னத திட்டத்தையும், நமக்கென்று ஒரு ஊழியத்தையும், பணியையும் வைத்திருக்கிறார். அந்த பணியை நிறைவேற்ற கர்த்தருடைய கரம் நம்மை பலப்படுத்தும், தகுதிபடுத்தும், பயன்படுத்தும்! கர்த்தர் எசேக்கியேலை தீர்க்கதரிசனம் உரைக்கும்படி தெரிந்து கொண்டார். அதை நிறைவேற்ற கர்த்தருடைய கரம் அவர்மேல் அமர்ந்தது என்று வேதம் கூறுகிறது (எசே.1:3; 3:14; 3:22; 8:1; 33:22; 37:1; 40:1). கர்த்தருடைய கரம் எசேக்கியேலை அவர் போக முடியாத இடங்களுக்கு கொண்டு சென்றது. காணமுடியாத காரியங்களை காண செய்தது. ஊழியத்தை நிறைவேற்ற பெலன் தந்தது. எஸ்றா, நெகேமியா போன்ற தேவ மனிதர்களையும் தேவனுடைய கரம் அவர்களைக் கொண்டு நிறைவேற்ற வேண்டிய காரியங்களை சிறப்பாக நிறைவேற்றி முடிக்க பயன்படுத்தியது (எஸ்றா 7:28; நெகே.2:18; 6:15,16). ஆம், கர்த்தர் தம்முடைய கரத்தை உங்கள்மேல் வைத்து இந்த ஆண்டு உங்களைக் கொண்டு செய்ய நினைத்திருக்க அனைத்தையும் செய்து முடிப்பார்! உங்களை ஆச்சரியமாக பயன்படுத்துவார்!.

## திருச்சபையைக் கட்டும் கரம்

இறுதியாக, 'கர்த்தருடைய கரம்' என்கிற பதம் அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் இரண்டு முறை காணப்படுகிறது. 'கர்த்தருடைய கரம் அவர்களோடே இருந்தது. அநேக ஜனங்கள் விசுவாசிகளாகி, கர்த்தரிடத்தில் திரும்பினார்கள்' (அப்.11:21). திருச்சபை உபத்திரவத்தினூடே சென்ற நாட்கள் அது. ஆகிலும் கர்த்தருடைய கரம் விசுவாசிகள்மேல் இருந்தது. அவர்கள் இயேசுவைப் பிரசங்கித்தபோது அநேகர் இரட்சிக்கப்பட்டார்கள். தேவ ராஜ்யம் வேகமாக வளர்ந்தது. அப்போஸ்தலர் 13-ம் அதிகாரத்தில் பவுலின் ஊழியத்தை எதிர்த்து நின்ற எலிமா என்ற மாயவித்தைக்காரனை கர்த்தருடைய கரம் சந்தித்தது. அவன் குருடனாய் மாறி, கைலாகு கொடுக்கிறவர்களைத் தேடினான் (அப்.13:11) . ஆம், இந்த 2020ம் ஆண்டு கர்த்தருடைய கரம் திருச்சபைகளைக் கட்டி எழுப்பும். ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டு சபைகளில் சேருவார்கள். திருச்சபைகளையும், ஊழியங்களையும் எதிர்க்கிறவர்களை கர்த்தர் நிச்சயம் சந்திப்பார். தைரியமாக செயல்படுவோம்!

கடைசியாக சகோதரரே. தேவனுடைய கரம் தம்மைத் தேடுகிறவர்கள் எல்லார்மேலும் அவர்களுக்கு நன்மையாக இருக்கிறதென்று எஸ்றா கூறுகிறார் (எஸ்றா 8:22). ஆகவே இந்த ஆண்டு கர்த்தரை ஜெபத்திலும், வேத வாசிப்பிலும், அவரை ஆராதிப்பதிலும், அவருக்கு ஊழியம் செய்வதிலும் இன்னும் அதிகமாய் தேடுங்கள். கர்த்தருடைய கரம் நிச்சயம் உங்கள்மேல் நன்மையாக இருக்கும் அல்லேலுயா!

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மூத்த போதகர், சிட்டி ரிவைவல் ஏ.ஜி. சர்ச், திருச்சி



# ஆதி சபையிலிருந்து கற்றுக்கொள்வோம்

Rev. P.S. ராஜமணி

இயக்குநர் - அகில இந்திய விஷன் 2020

## 7. அற்புத அடையாளங்கள் தாராளமாய் நடைபெற்றன

### அன்று

ஆதி சபையில் அற்புத அடையாளங்கள் சாதாரணமாய் நடைபெற்றன. இயேசுவைப் பின்பற்றி ஊழியம் செய்த அப்போஸ்தலரும், சீஷர்களும் இயேசுவைப் போல் அற்புத அடையாளங்கள் மூலம் வேத வசனத்தை உறுதிப்படுத்தினர்.

### இயேசுவின் ஊழியம்

நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தமது ஊழிய நாட்களில் குறிப்பாக மூன்று காரியங்களைச் செய்தார். 1. பிரசங்கித்தார், 2.போதித்தார். 3. அற்புதங்கள் செய்தார். மத்தேயு எழுதின சுவிசேஷத்தை ஆராய்ந்தால் கீழ்காணும் காரியங்களைக் காணலாம்.

**இயேசு பிரசங்கித்தார், போதித்தார் என்று கூறப்பட்டுள்ள வசனங்கள்**

மத்தேயு 4:17,23, 5-7 அதிகாரங்கள், 9:12-17,35; 10:5-42; 11:1; 12:1-8,25-28 15:1-20; 16:1-28; 17:19; 18:35; 19:3-20:28; 21:22-25:46.

**இயேசு அற்புதங்கள் செய்ததாக கூறப்பட்டுள்ள பகுதிகள்**

மத்தேயு 4:23 : சகல வியாதிகளையும், சகல நோய்களையும் நீக்கினார்.

மத்தேயு 4:24 : பலவித வியாதிகளையும், வேதனைகளையும், சகல பிணியாளிகளையும், பிசாசு பிடித்தவர்களையும், சந்திர ரோகிகளையும், திமிர்வாதக்காரரையும் குணமாக்கினார்.

மத்தேயு 8:2,3 : குஷ்டரோகியை குணமாக்கினார்.

மத்தேயு 8:5–13 : நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரனை திமிர்வாதத்திலிருந்து குணமாக்கினார்.

மத்தேயு 8:14 : பேதுருவின் மாமியை ஜுரத்திலிருந்து குணமாக்கினார்.

மத்தேயு 8:16 : அசுத்த ஆவிகளைத் துரத்தினார், பிணியாளிகளை குணமாக்கினார்.

மத்தேயு 8:24–26 : காற்றையும்,கடலையும் அதட்டி அமைதிப்படுத்தினார்.

மத்தேயு 8: 28–34 : பிசாசு பிடித்த இரண்டு பேரை விடுவித்தார்.

மத்தேயு 9:2–7 : திமிர்வாதக்காரனை குணமாக்கினார்.

மத்தேயு 9:20–22 : 12 வருடமாய் பெரும்பாடுள்ள ஸ்திரீயை குணமாக்கினார்.

மத்தேயு 9:23–25 : மரித்துப்போன சிறு பெண்ணை உயிருடன் எழுப்பினார்.

மத்தேயு 9:27–30 : இரண்டு பிறவிக் குருடர்களை குணமாக்கினார்.

மத்தேயு 9:32–33 : பிசாசு பிடித்த ஊமையனை குணமாக்கினார்.

மத்தேயு 9:35 : சகல வியாதிகளையும், நோய்களையும் குணமாக்கினார்.

மத்தேயு 12:9–13 : சூம்பின கையையுடையவனை குணமாக்கினார்.

மத்தேயு 12:15 : திரளான ஜனங்களை குணமாக்கினார்.
மத்தேயு 12:22 : பிசாசு பிடித்த குருடும் ஊமையுள்ளவர்களை குணமாக்கினார்.
மத்தேயு 14:14 : திரளான மக்களில் வியாதியுள்ளவர்களை குணமாக்கினார்.
மத்தேயு 14:15–21 : 5 அப்பம் 2 மீனைக்கொண்டு திரள் கூட்டம் மக்களை போஷித்தார்.
மத்தேயு 14:29 : பேதுருவை கடலின் மேல் நடக்கப்பண்ணினார்.
மத்தேயு 14:35,36 : திரள் கூட்டம் பிணியாளிகள் இயேசுவின் வஸ்திரத்தைத் தொட்டு சுகம் பெற்றனர்.
மத்தேயு 15:21–28 : கானானிய பெண்ணின் மகளை விடுவித்தார்.
மத்தேயு 15:30,31 : சப்பாணிகள், குருடர், ஊமையர், ஊனரை குணமாக்கினார்.
மத்தேயு 15:32–38 : ஏழு அப்பம் சில மீன்களைக் கொண்டு பல்லாயிரம் பேரை போஷித்தார்.
மத்தேயு 17:14–18 : சந்திரரோகியை குணமாக்கினார்.
மத்தேயு 19:2 : திரளான ஜனங்களை குணமாக்கினார்.
மத்தேயு 20:30–34 :இரண்டு குருடர்களை குணமாக்கினார்.

இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தில் அற்புத அடையாளங்கள் எவ்வளவு நடைபெற்றன என்பதை இதன்மூலம் தெளிவாக விளங்கிக் கொள்ள முடிகிறது. இயேசுவைப் பின்பற்றின அப்போஸ்தலரும், சீஷர்களும் இதையே செய்யும்படி கட்டளையிட்டார்.

அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷரையும் வரவழைத்து, சகல பிசாசுக்களையும் துரத்தவும், வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும் அவர்களுக்கு வல்லமையும், அதிகாரமும் கொடுத்து, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கிக்கவும், பிணியாளிகளைச் சொஸ்தமாக்கவும் அவர்களை அனுப்பினார் (லூக்கா 9:1,2).

ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன்; நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார் (யோவான் 12:26).

மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்கு சொல்லுகிறேன்; நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான். நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன், என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும், அதை நான் செய்வேன் (யோவான் 14:12-14).

விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதியஸ்தர் மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார் (மாற்கு 16:17,18).

## அப்போஸ்தலரின் ஊழியம்

அப்போஸ்தலரும், சீஷர்களும் இயேசுவைப் போலவே இயேசுவின் நற்செய்தியைப் பிரசங்கித்தனர். வேத வசனங்களைப் போதித்தனர். தேவையோடு வந்த மக்களுக்கு ஜெபித்து அற்புத சுகத்தைப் பெற வழி செய்தனர்.

அப்போ. 2:43 : அப்போஸ்தலர்களால் அநேக அற்புதங்களும் அடையாளங்களும் செய்யப்பட்டன.

அப்போ.3:1–8 : பிறவி முடவன் குணமானான்.

அப்போ.5:1–10 : அனனியா, சப்பீராள் தேவ தண்டனை பெற்றனர்.

அப்போ.5:12 : அநேக அடையாளங்களும், அற்புதங்களும் நடைபெற்றன.

அப்போ.5:15,16 : பேதுருவின் நிழற்பட்டு பிணியாளிகள் சுகமானார்கள்.

அப்போ.5:18–20 : சிறையிலடைக்கப்பட்ட அப்போஸ்தலர், தேவதூதனால் விடுவிக்கப்பட்டார்கள்.

அப்போ.6:8 : ஸ்தேவான் பெரிய அற்புதங்கள், அடையாளங்களைச் செய்தார்.

அப்போ.8:7 : பிலிப்பு மூலமாக அசுத்த ஆவிகள் துரத்தப்பட்டன. திமிர்வாதக்காரன், சப்பாணிகள் சுகமானார்கள்.

அப்போ.9:32–34 : எட்டு வருடமாக திமிர்வாதத்தில் கஷ்டப்பட்ட ஐனேயா அற்புத சுகம் பெற்றான்.

அப்போ. 9:36–41 : மரித்துப்போன தொற்காள் என்ற பெண்ணை உயிருடன் எழுப்பினார் பேதுரு.

அப்போ. 12:1–17 : சிறையிலடைக்கப்பட்ட பேதுரு தேவதூதனால் விடுவிக்கப்பட்டார்.

அப்போ.13:8–12 : மாயவித்தைக்காரன் மேல் தேவ கோபாக்கினை வர பவுல் கட்டளையிட்டபோது அப்படியே நடந்தது.

அப்போ. 14:810 : சப்பாணி அற்புத விடுதலை பெற்றான்.

அப்போ.16:16–30 : குறி சொல்லுகிற ஆவி துரத்தப்பட்டது. பிலிப்பி பட்டண சிறைச்சாலை தேவ வல்லமையால் அதிர்ந்து திறந்தது.

அப்போ.19:11,12 : தேவன் விசேஷித்த அற்புதங்களை பவுல் மூலம் செய்தார். பவுல் உடலிலிருந்த ஆடைகளை வியாதியஸ்தர், பொல்லாத ஆவி பிடித்தவர்கள்மேல் போட்டபோது சுகமானார்கள்.

அப்போ.19:19 : இயேசுவின் வல்லமையைக் கண்டு மாயவித்தைக்காரர்கள் தங்கள் மந்திர புத்தகங்களை சுட்டெரித்தனர்.

அப்போ.28:3–6 : பாம்பு கடித்தபோதும் பவுல் சாகவில்லை.

அப். 28:8,9 : மெலித்தாதீ வுமு தலாளியின்த கப்பனுக்காகப வுல்லெ ஜபித்தபோதுஅ வர் சுகமானார். அந்த தீவிலிருந்த மற்ற வியாதிக்காரருக்காகவும் ஜெபித்தபோது அவர்கள் குணமானார்கள்.

இயேசுவைப் பின்பற்றின அப்போஸ்தலர், சீஷர்களின் ஊழியங்களிலும், அற்புத அடையாளங்கள் நடைபெற்றன என்பதை தெளிவாகக் கண்டோம்.

## சபை சரித்திரத்தில்

அப்போஸ்தலர் காலத்திற்குப் பின்பும் அற்புத அடையாளங்கள் நடைபெற்றன. கி.பி.320-ல் கான்ஸ்டன்டைன் என்ற ரோமப் பேரரசன் இயேசுவை ஏற்றுக்கொண்ட பின் கிறிஸ்தவம் அரசாங்க மார்க்கமாயிற்று, கோடிக்கணக்கானவர்கள் கிறிஸ்தவர்களாய் மாறினர். வெறும் மதம் மாறின கூட்டம் பெருகிற்று. மனந்திரும்புதலும், பாவமன்னிப்பும், பரிசுத்த வாழ்வும் மங்க ஆரம்பித்தன. போதகர்கள் அரசாங்க சம்பளம் வாங்கும் உத்தியோகஸ்தராக மாறினர். வேத வசனம் புறக்கணிக்கப்பட்டது. சபைக்குள் மூடக்கொள்கைகளும், சடங்காச்சாரங்களும், பாவங்களும் பெருக ஆரம்பித்தன. சபை தேவ வல்லமை இழந்தது.

– தொடரும்.



## 2020-ஐ இலக்குடன் தொடங்குங்கள் இலக்கை நோக்கித் தொடருங்கள்

பரிசுத்த பவுல், ‘‘நாம் நிச்சயமில்லாதவர்களாக ஓடக்கூடாது” (1 கொரி.9:26) என்றும், “இலக்கை நோக்கித் தொடர வேண்டும்” எனவும் (பிலி.3:13,14) நமக்கு அறிவுறுத்துகிறார். நாம் இந்த புத்தாண்டில் நிச்சயமான இலக்குகளைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும். நம் வாழ்வின் அனைத்து நிலைகளிலும் தேறுகிறது அனைவருக்கும் பிரத்தியட்சமாய் காணப்படுவது அவசியம் (1தீமோ.4:15). இந்த 2020-ம் ஆண்டில் நீங்கள் நிர்ணயித்துக் கொள்வதற்கும், அடைவதற்கும் ஏற்ற சில பயனுள்ள இலக்குகளைக் குறித்து உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

### 5 அத்தியாவசியமான இலக்குகள் : 5 Fs

**1. விசுவாசம் (FAITH)**

- நான் அனுதினமும் குறைந்தது ஒரு மணி நேரம் தேவனோடு கூட செலவிடுவேன்.
- இந்த வருடத்தில் ஒரு முறையாவது வேதாகமத்தை முழுமையாக வாசித்து முடிப்பேன்.
- அனுதினமும் ஒரு வேத வசனத்தை மனனம் செய்வேன்.
- மாதம் ஒருமுறை ஒரே ஒரு ஆவிக்குரிய புத்தகத்தையாவது வாசிப்பேன்.
- ஆலயத்திற்கு தவறாமல் செல்வேன்; மட்டுமின்றி சரியான நேரத்திற்கும் செல்வேன்.
- சபையில் நடைபெறும் பற்பல ஊழியங்களில் ஏதாவது ஒன்றிலாகிலும் பங்கெடுத்து, உண்மையாய் ஊழியம் செய்வேன்.
- ஆவியின் கனிகள் என்னில் வளர்ந்து பெருக பிரயாசம் எடுப்பேன்.
- ஒரு நாளில் 15-30 நிமிடங்களுக்கும் அதிகமாக சமூக வலைத்தளங்களில் நேரத்தை செலவிட மாட்டேன்.

**2. குடும்பம் (FAMILY)**

- நான் குடும்ப ஜெபத்தை கடைப்பிடிப்பேன்.
- எனது குடும்ப உறவுகளை வலுப்படுத்துவேன் (குடும்பமாக வெளியே செல்லுதல், பேசி மகிழ்தல்...)
- ஒரு நாளில் ஒரு முறையாவது எனது குடும்பத்தினருடன் இணைந்து உணவருந்துவேன்.
- எனது குடும்பத்தை சேர்ந்தவர்களை கிறிஸ்துவுக்கென்று ஆதாயம் செய்வேன்.
- என் குடும்பத்தினர் மீது எனக்குள்ள அன்பை செயல்களினாலே வெளிப்படுத்துவேன்.
- மன்னிப்பை அனுதினமும் என் வாழ்வில் அப்பியாசப்படுத்துவேன்.

### 3. பொருளாதாரம் (FINANCE)

- நான் தசமபாகத்தை உண்மையாக செலுத்துவேன்.
- சோம்பேறியாக இருக்காமல் கடினமாக உழைப்பேன்.
- கடன் வாங்க மாட்டேன்; வாங்கிய கடன்களை விரைவில் திருப்பி செலுத்துவேன்.
- எனது வருமானத்திற்குள் திருப்தியாக வாழுவேன்.
- ஏழை, எளியவர்களுக்கு உதவி செய்வேன்.
- வருமானத்தில் ஒரு சிறு பகுதியை முறையாக சேமித்து வைப்பேன்.
- உற்சாக மனதுடனே கர்த்தருக்கு காணிக்கை செலுத்துவேன்.

### 4. ஆரோக்கியம் / உடல் நலம் (FITNESS )

- எனது உடல் பரிசுத்த ஆவியானவருடைய ஆலயம் என்பதை உணர்ந்து செயல்படுவேன்.
- தினமும் பத்திலிருந்து முப்பது நிமிடங்கள் வரை நடைபயிற்சி / உடற்பயிற்சி மேற்கொள்வேன்.
- நிறைய தண்ணீர் அருந்துவேன்.
- ஆரோக்கியமற்ற, துரித உணவுகளை (Fast Food) உண்ணமாட்டேன்.
- எனது உடலின் சர்க்கரை, கொழுப்பு, இரத்த அழுத்தம் இவற்றை கட்டுப்பாட்டில் வைத்திருக்க ஆவன செய்வேன்.
- எனது அதிகப்படியான உடல் எடையைக் குறைத்து, என் உயரத்திற்கும், வயதிற்கும் ஏற்ற உடல் எடையைப் பெற அயராது முயற்சிப்பேன்.

### 5. நட்பு / உறவுகள் (FRIENDSHIP )

- நான் இவ்வாண்டில் புதிதாக பத்து நண்பர்களையாவது சம்பாதிப்பேன்.
- தினமும் குறைந்தபட்சம் ஒருவரின் சந்தோஷத்திற்கு நான் காரணமாக இருப்பேன்.
- பிறரின் தகுதியான நற்செயல்களை பாராட்டுவேன்; உற்சாகப்படுத்துவேன்.
- வம்பு பேசமாட்டேன்; புறங்கூறமாட்டேன்; உள்ளத்தில் பகையை மறைத்து வைக்க மாட்டேன்.
- என் நாவை அடக்கி, வார்த்தைகளை கவனமாகக் கையாளுவேன்.
- இந்த ஆண்டு இரண்டு பேரையாவது இயேசுவுக்காக ஆதாயம் செய்து ஞானஸ்நானத்திற்குள் வழிநடத்துவேன்.

**இந்த இலக்குகளை நீங்கள் அடைய கர்த்தர் தாமே உங்களை பெலப்படுத்துவாராக; உங்களை ஆசீர்வதிப்பாராக!**

ஆசிரியர்



# நீங்களும் பைபிளை வாசிக்கலாம்
## You too can read the Bible

**Rev. Dr. L. ஜெயபாலன்**
மண்டல தலைமைப் போதகர், திண்டுக்கல் மண்டலம்

பைபிள் (Bible) ஒரு ஒப்பற்ற நூல், உலகிலேயே முதலாவது அச்சடிக்கப்பட்ட நூலும் கூட. இது கிறிஸ்தவர்களாலும், பிறராலும் வாசிக்கப்படும் நூல். ஆங்கில இலக்கியம் படிப்பவர்கள், யோபின் நூல் (Book of Job) ஆதாம் ஏவாள் வரலாறு அடிப்படையில் எழுதப்பட்ட, ஜான் மில்டனின் Paradise Lost (இழக்கப்பட்ட பரதீசு), Paradise Regained (பரதீசு திரும்பப் பெறுதல்) போன்ற நூல்களும் பைபிளில் இயேசு கிறிஸ்து மூலம் வரும் மீட்பு (இரட்சிப்பு) என்பதை கதை வடிவில் எழுதின ஜான் பனியனின் ஒப்பற்ற நூலான மோட்சப் பிரயாணமும் மிகச் சிறந்ததாகும். இப்படி பைபிளைக்குறித்து எழுதிக் கொண்டே போகலாம்.

**எபிரெய மொழி (Hebrew) :** பைபிள் முதலில் எபிரெய மொழியில் எழுதப்பட்டது. எபிரெய மொழி (Hebrew) “சமயத்தின் மொழி” என அழைக்கப்படுகிறது. இது சித்திர வடிவம் கொண்டதாகும். உயிரோவியமாக பேசக்கூடியதாகும். தனிப்பட்ட ஒவ்வொருவருக்குறியதாகும்.

**கிரேக்கம் (Greek) :** இது கலாச்சாரம், தத்துவம், கற்றலின் மொழியாகும். பகுத்தறிவிற்குரியதும், அகில உலகத்திற்குரிய மொழியாகும்.

**லத்தீன் (Latin) :** இது சட்டம் அதிகாரம், அரசியல் இராணுவத்திற்குரிய மொழியாகும்.

எபிரெய மொழியில் உருவான வேதாகமம், கிரேக்கம், லத்தீன், ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு, இப்பொழுது உலகிலுள்ள அனைத்து மொழிகளிலும் கிடைக்கின்ற ஒரு ஒப்பற்ற நூலாகும். பைபிளிலுள்ள சங்கீதப் புத்தகத்திலிருந்து வேதாகமத்தைக் குறித்த அநேக காரியங்களை ஒருவர் அறிய முடியும். சங்கீதப் புத்தகம் இஸ்ரவேல் மக்களின் பாடல் நூல் என அழைக்கப்பட்டது (The hymn book of Israel). பைபிளில் காணப்படும் பைபிள் (Psalms- a Bible within the Bible) என்றும், பல நூற்றாண்டுகளில் கட்டப்பட்ட பெரிய தேவாலயம் (A beautiful cathedral built over the centuries) என்றும், சங்கீதம் பைபிளில் காணப்படும் மிகப்பெரிய நூல் (Psalms is the longest book in the Bible) என்றும் அழைக்கப்படுகிறது.

### 119-ம் சங்கீதம் பைபிளைக் குறித்து கீழ்காணும் காரியங்களை நமக்கு வெளிப்படுத்துகின்றது

**வேதம் (Law) 119:1 :** “கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள்” (சங். 119:1) இது அறிவுரை அல்லது போதனையைக் குறிப்பிடும்.

**வசனம் (அ) வார்த்தை (Speech or Utterance) 119:9:** சொற்பொழிவு, சொல், வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக் கொள்ளுகிறதினால்தானே. தேவனுடைய சித்தத்தை வெளிப்படுத்தும் ஒரு பொதுவான வார்த்தையாகும்.

**நியாயத்தீர்ப்புகள் (Ordinances) 119:13 :** சட்ட ரீதியான அறிவிப்புகள் Legal pronouncements தெய்வீக நிர்வாகத்தின் விதிகள். “உம்முடைய வாக்கின் நியாயத்தீர்ப்புகளையெல்லாம், என் உதடுகளால் விவரித்திருக்கின்றேன்”

**கற்பனை (Commandments) 119:6 :** சமய சம்பந்தமான நியமங்களுக்கான நிர்வாகக் கட்டளை. "நான் உம்முடைய கற்பனைகளையெல்லாம் கண்ணோக்கும்போது, வெட்கப்பட்டுபோவதில்லை"

**கட்டளை (Precepts) 119:4 :** தேவனால், மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட சன்மார்க்க கடமை. "உம்முடைய கட்டளைகளை நாங்கள் கருத்தாய் கைக்கொள்ளும்படி நீர் கற்பித்தீர்"

**சாட்சிகள் (Testimonies) 119:2 :** கடவுளுடைய தன்மை, குறிக்கோளை பற்றி அவரது சொந்த வெளிப்பாடு.

**பிரமாணங்கள் (Statutes) 119:5 :** உமது பிரமாணங்களைக் கைக்கொள்ளும்படி என் நடைகள் ஸ்திரப்பட்டால் நலமாயிருக்கும்.

**நியாயங்கள் (Judgements) 119:7 :** கடவுளின் நியாயத் தீர்ப்புகள், வரைமுறைக் கோட்பாடுகள் போன்ற வார்த்தைகளுக்கு ஒரே எபிரெய வார்த்தை கூறப்பட்டுள்ளது. அமெரிக்காவில் ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம் லிங்கன் என்பவர் "மனிதனுக்கு கொடுக்கப்பட்ட மிகப்பெரிய ஈவே வேதாகமம். இந்த நூலின் மூலமாக இரட்சகரிடமிருந்து எல்லா நன்மைகளும் நமக்கு கொடுக்கப்பட்டுள்ளன".

## கடவுளுடைய வார்த்தையின் ஆசீர்வாதங்கள்

● **இது ஒருவரை சுத்திகரிக்கிறது** "வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னை காத்துக்கொள்ளுகிறதினால் தானே" (சங்.119:9). மனிதன் வெளியே நன்றாக காட்சியளிப்பான். அவனுடைய வார்த்தைகள் தேனைப் புசிப்பதுபோல இருப்பதாக தோன்றும். ஆனால் அவனது உள்ளமோ கசடுகள் நிறைந்ததாக இருக்கும். எனவே தான் எபி. 4:11,12-ல் கர்த்தருடைய வார்த்தை இருபுறமும் கருக்குள்ள எந்த பட்டயத்தைக் காட்டிலும் கூர்மையானது என கூறுகிறது. சோதனையான வேளைகளில் கடவுளின் வார்த்தைகளை மனதில் நினைத்து, வாயில் அறிக்கையிட்டு வெற்றி பெற பரிசுத்தாவியானவர் உதவி செய்வார்.

● **கடவுளின் வார்த்தைக்கு எதிராக பாவம் செய்யாமல் இருக்க தேவ வசனம் உதவுகிறது** (சங்.119:11). "நான் உமக்கு விரோதமாகப் பாவம் செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்". சோதனை நேரங்களில் அன்புள்ள தேவன் வசனங்கள் மூலம் நம்மை எச்சரிப்பார். வேதனை நேரங்களில் ஆலோசனை கூறுவார். மனதில் ஆறுதலையும் கொண்டுவருவார். எனவே தான் கடவுளின் வார்த்தைகளை வாசிக்க வேண்டும், நேசிக்க வேண்டும், யோசிக்க வேண்டும்.

நான் 23 வயதாயிருக்கையில், ஒரு பெண்ணை திருமணம் செய்யும்படி ஒருவர் ஆலோசனை கூறினார். அதை என் தகப்பனாரிடம் கூறினேன். "நான் 33 வயதில் திருமணம் செய்தேன். நீ 30 வயதில் திருமணம் செய்யலாம் என்று நல்ல ஆலோசனை கூறினார். சில சமயங்களில், யாரை தெரிந்தெடுப்பது என்ற போராட்டம். நீ காத்திரு... காத்திரு" என்று கர்த்தர் உணர்த்தினார். எண்ணங்களில் பார்வையில் சோதனை வரும்பொழுது, கர்த்தருடைய வசனத்தை மனதில் கொண்டுவந்து, பரிசுத்தாவியின் கிருபையால் என்னை காத்துக்கொள்ள கிருபை தந்தார். நம்மை உண்டாக்கின தேவன் வசனத்தின் மூலம் நம்முடன் பேசுகிறவர்.

தொடரும்.

பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற, குடும்ப ஆலோசனைகளுக்கு
94434 74921 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும்.



சங்கீத புஸ்தகம்

# தாவீதின் சங்கீதங்கள்

**Rev. Dr. சாமுவேல் ராஜ் R.**

All India National Director, Global University

நமது வேதாகமத்திலுள்ள சங்கீதங்களில் 100 சங்கீதங்களை எழுதியது யார் யார் என்பது சங்கீதங்களின் தலைப்பில் நமக்குத் தரப்பட்டுள்ளது. அவற்றில் தாவீது எழுதியவை மொத்தம் 73 ஆகும்.

“இஸ்ரவேலின் சங்கீதங்களை இன்பமாய்ப் பாடின ஈசாயின் குமாரனாகிய தாவீது” என வேதாகமத்தில் (2 சாமு.23:1) தாவீது வருணிக்கப்படுகிறான். இவன் இசை வல்லுனன் (1 சாமு.16:18-23). தேவாலயத்தில் இசை வாசித்துப் பாடி ஆராதிக்கும் லேவியரின் ஊழியத்தையும் திட்டம் பண்ணினான் (1 நாளா.15:16; 16:7; 25:1). தாவீது பாடிய சங்கீதங்களில் பெரும்பாலானவை அவனுக்கு வந்த இக்கட்டின் காலங்களில் பாடப்பட்டவை ஆகும். வியாதி, விரோதிகள், அலைச்சல்கள், இவை தவிர வீடு பிரதிஷ்டையில் பாடியதும், பாவ அறிக்கை செய்து பாடியதும், தேவனைத் துதித்துப் பாடியதும், விடுதலைக்காகப் புலம்பிப் பாடியதும், தேவனுக்கு நன்றி செலுத்தி பாடியவையும் தாவீதின் 73 சங்கீதங்களில் உள்ளடங்கும்.

தாவீது பாடிய சங்கீதங்களை விளங்கிக் கொள்ள தாவீதின் வாழ்க்கைப் பின்னணியத்தை கவனிப்பது பயனளிக்கும்.

ஆடு மேய்த்த சிறுவனாகிய தாவீது, அரசனாய் எருசலேமில் அரியணை ஏறி ஆட்சி செய்த காலம் வரைக்குமுள்ள அவனது வாழ்க்கையை ஐந்து முக்கிய பிரிவுகளாகப் பிரித்துப் பார்க்கலாம்.

**1.“ பெத்லகேம் ” தாவீது (The Bethlehem David)** 1 சாமு.16-17

ஆடுமேய்த்துக் கொண்டிருந்த தாவீது, பெத்லகேமில் அவனுடைய சகோதரர் நடுவில் ராஜாவாக சாமுவேல் மூலம் அபிஷேகம் பண்ணப்படுகிறான் (1 சாமு.16:12,13). இந்த அபிஷேகத்துக்குப் பின்பு கோலியாத்தை வீழ்த்தி இஸ்ரவேலுக்கு மகாப் பெரிய வெற்றியைப் பெற்றுத் தருகிறான்.

**2. “அரண்மனை” தாவீது (The Palace David)** 1 சாமு.18-20

சவுலின் அரண்மனைக்கு அழைத்துச் செல்லப்படும்போது, ராஜ அபிஷேகத்துடன்தான் தாவீது செல்கிறான். ஈட்டியைப் பிடித்துக் கொண்டு பொல்லாத ஆவியினால் பிடிக்கப்பட்டிருந்த சவுல்ராஜாவுக்கு முன்பாக சுரமண்டலத்தைப் பிடித்துக்கொண்டு தேவ ஆவியின் நிறைவினால் பாடினான், தாவீது.

**3. “வனாந்தர” தாவீது (The Wilderness David)** 1 சாமு.18-31

சவுலிடத்திலிருந்துத் தப்பிக் காடுகளிலும், மலைக் கெபிகளிலும் வனாந்திரத்திலும் அலைந்து திரிந்த தாவீதின் கண்ணீர் ஆறாய் ஓடிற்று எனலாம். இதைத்தான் “என் அலைச்சல்களைத் தேவரீர் எண்ணியிருக்கிறீர்; என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும்; அவைகள் உம்முடைய கணக்கில் அல்லவோ இருக்கிறது” (சங்.56:8) என்று பாடுகிறான். தாவீது வனாந்தரத்தில் அலைந்த காலங்கள் பதினெட்டு நீண்ட ஆண்டுகளாகும் (1சாமு.21:27). தனக்கு வந்த நோய்நொடிகள், பகைகள், தனிமை போன்ற சூழ்நிலைகளில் பல சங்கீதங்களை எழுதினான்.

தாவீது பாடிய 73 சங்கீதங்களில், புலம்பிப் பாடிய சங்கீதங்களில் பெரும்பாலானவை இக்காலத்தில் பாடியவைதான் எனலாம். தேவனிடத்தில்

அபயமிட்டுக் கூப்பிட்டு, தனது துன்ப நிலையை விவரித்து, தேவனே தனது நம்பிக்கையென தாவீது புலம்பும் வியாகுலக்குரல்களை இந்த சங்கீதங்களில் காணலாம் (சங்.3-7;12-14;17,25,27,31,38,41,51,56-59,70,86,109,140,143).

**4. "எபிரோன்" தாவீது (The Hebron David)** 2 சாமு. 2-5

பெத்லகேமில் அபிஷேகம் பண்ணப்பட்ட பின், இரண்டாவது முறையாக தாவீது எபிரோனில் மறுபடியும் யூதாவின் மனுஷரால் யூதாவின் மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டான் (2 சாமு.2:4). ஏழு ஆண்டுகள் இங்கு ஆட்சி செய்த தாவீது, தனது குடும்பத்தினரையும் எபிரோனைச் சுற்றியுள்ள சிற்றூர்களில் குடியேறினார்கள். இக்காலம் அமைதியின் காலமாகவும் குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றெடுத்த காலமாகவும் இருந்தது. கர்த்தரைத் துதித்துப் பாடிய பெரும்பாலான சங்கீதங்களை இக்காலத்தில் எழுதிப் பாடினான் என நம்ப இடமுண்டு. துதியின் சங்கீதங்கள் 8,9,18,29,65,100,103,108,122,124, 134,135,144-150.

**5. "எருசலேம்" தாவீது (The Jerusalem David)** 2 சாமு.5-24

2 சாமுவேல் 5-ம் அதிகாரத்தில் மூன்றாவது முறையாக இஸ்ரவேலின் மூப்பரால் சமஸ்த இஸ்ரவேலின் மேலும் ராஜாவாக தாவீது அபிஷேகம் பண்ணப்படுகிறான்.

தாவீது தான் அடைய வேண்டிய எருசலேம் அரியணையில் வந்து அமர்ந்த காலம் இது. துதித்துச் சங்கீதங்களைப் பாடிய தாவீது, நன்றி செலுத்தும் சங்கீதங்களாகிய 103,116 போன்றவற்றை இக்காலத்தில் பாடினான் எனலாம். அந்தோ பரிதாபம்! பாவம் செய்து 51-ம் சங்கீதத்தில் பாவ அறிக்கை செய்த காலப் பின்னணியமும் இக்காலத்தைச் சார்ந்ததே ஆகும். நன்றி செலுத்திப் பாடிய சங்கீதங்கள்:10,11,20,26,30,32, 34,36,39,61,63,116,138,139.

தாவீது எழுதிய சங்கீதங்களின் பின்னணியங்களை அவனது வாழ்க்கையின் பல்வேறு காலக்கட்டங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தோம். இனி, தாவீதின் தனிப்பட்ட வாழ்க்கையோடு சம்மந்தப்பட்ட சங்கீதங்களை கீழ்க்கண்டவாறு பகுத்துப் படிக்கலாம். இவை மொத்தம் பதினான்கு ஆகும்.

**நெருக்கங்கள் மற்றும் பாடுகளில் பாடியவை :**

சங்கீதம் 34: ஏற்கெனவே சவுலுக்குத் தப்பி பெலிஸ்தருடைய தேசத்தில் அடைக்கலம் தேடி வந்த தாவீது. பெலிஸ்தியரின் ராஜாவாகிய ஆகீஸ் என்பவனுக்கு முன்பாக தான் கண்டுபிடிக்கப்படாதபடிக்கு பயித்தியக்கார வேஷம் போட்டு, பின்பு அங்கிருந்துத் துரத்திவிடப்பட்டு அதுல்லாம் என்னும் குகைக்குத் தப்பி ஓடினான். அப்போது தாவீது பாடிய அருமையான சங்கீதம் இது. 1சாமு.21:10-22:1 வரை உள்ள சரித்திரப் பின்னணியத்தில் இந்த சங்கீதத்தை வாசித்து பயனடைய வேண்டும். ஆகீஸை விட்டு அதுல்லாம் கெபிக்குச் செல்லும் தாவீது தனது அனுபவத்திலிருந்து நமக்குக் கற்றுத்தரும் சத்தியங்களைப் பாருங்கள்! தாவீதின் அறிக்கையை கவனியுங்கள். "கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்தரிப்பேன்" (வசனம் 1). கர்த்தரைத் துதியுங்கள் என்பது இங்கு தாவீது தரும் ஆலோசனை (1-3). "நான் கர்த்தரைத் தேடினேன்" (வசனம் 4). கர்த்தரைத் தேடுங்கள் என்பதே இங்கு நாம் பெறும் போதனை (4-8). "கர்த்தருடைய பரிசுத்தவான்களே, அவருக்குப் பயந்திருங்கள்" (வசனம் 9). ஆகீசை விட்டு அதுல்லாமுக்கு ஓடிச்செல்லும் அனுபவங்களிலும் கர்த்தருக்குப் பயப்படுவதை விட்டு விடாதிருங்கள் என்பது இங்கு நாம் காணும் சத்தியம் (9-6). "நீதிமான்களுக்கு வரும் துன்பங்கள் எல்லாவற்றினின்றும் கர்த்தர் அவனை விடுவிப்பார்" என்பதும் பாடுகளின் நடுவில் தாவீதின் அறிக்கையாகும். ஆகீஸ் துரத்தினாலும், அதுல்லாம் என்னும் ஒளிப்பிடத்திலும், கர்த்தரை நம்புங்கள் என்று பரிசுத்தவான்களுக்குச் சொல்லப்படும் சத்தியம் இங்கு தெளிவாய் உள்ளது (17-22).

சங்கீதம் 63 : இது, சவுலுக்குத் தப்பியோடிய ஒரு சந்தர்ப்பத்தில் பாடின சங்கீதம். 1 சாமு. 23:14 இதன் பின்னணியாகும்.

யூதாவின் வனாந்திரத்திலும் அதனைச் சார்ந்த எல்லைகளிலும் தாவீது அலைந்து திரிந்த எல்லைகள் மொத்தம் பத்து (1 சாமு.18-31 அதி), நோப், காத், அரேத் என்னும் காடு, கேகிலா, சீப் மாகோன், பாரான் வனாந்தரங்கள், ஆகிலா என்னும் மலைக்காடு, என்கேதியிலுள்ள அரணிப்பான இடங்கள் மற்றும் வரையாடுகளுள்ள கன்மலைப் பகுதிகள். மேற்கண்ட பத்தும் யூதாவின் வனாந்திரப் பகுதிகளில் தாவீது பட்டப்பாடுகளின் பிரதிபலிப்பே ஆகும்.

தனது சொந்த குமாரனாகிய அப்சலோமுக்கு தப்பி ஓடிய அனுபவங்களின் புலம்பல் பாடலே 3-வது சங்கீதமாகும் (2 சாமு. 15:14 முதல்)

18,52,54,56,57,59,60,142-வது சங்கீதங்களும், பகைவரால் வந்த பாடுகளிலிருந்து இதயக் குமுறலாய் வந்தவையே ஆகும் (1 சாமு.19,21,22,29; 2 சாமு.19 அதிகாரங்கள்).

**பாவம், பாவ அறிக்கை :**

32-ம் சங்கீதம் பத்சேபாளுடன் பாவம் செய்த தாவீது தண்டிக்கப்பட்டபோது பாடிய சங்கீதம் (2 சாமு. 11:1-12:14). 51-ம் சங்கீதம் தாவீதின் பாவ அறிக்கையின் சங்கீதம் (2 சாமு.11:1-12-24).

"தாவீது ஏத்தியனாகிய உரியாவின் சங்கதி ஒன்று தவிரக் கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டதிலே தான் உயிரோடிருந்த நாளெல்லாம் ஒன்றையும் விட்டு விலகாமல், அவர் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்" என 1 இராஜா.15:5-ல் வாசிக்கிறோம். தாவீது தனது பாவத்தை மீறுதல்கள், அக்கிரமம், பாவம், பொல்லாங்கு, இரத்தப்பழிகள் எனப் பல்வேறு வார்த்தைகளில் 15-ம் சங்கீதத்தில் குறிப்பிடுகிறான். தான் செய்த பாவம். பிரதானமாக தேவனுக்கு விரோதமானது என்பதை உணருகிறான். தேவபக்தியுள்ள எந்தவொரு யூதனும் பாவம் என்பது முதலாவது தேவனுக்கு விரோதமானது என்றே பார்க்கிறான். யோசேப்பும் அப்படித்தானே சொன்னான்! (ஆதி. 39:9).

அப்படியே தாவீது தனது பாவம் தேவனுக்கு விரோதமானது என்றும், தனது முழு ஆவி, ஆத்துமா, சரீரத்தையும் பாதித்தது என்பதையும் கண்டான்.

தாவீதின் பாவம் அவன் கண்களையும் (வசனம் 3) உள்ளத்தையும் (வசனம் 6). காதுகளையும், எலும்புகளையும் (வசனம் 8), இருதயத்தையும், ஆவியையும் (வசனம் 10), கைகளையும் (வசனம் 14), உதடுகளையும் (வசனம் 13-15) பாதித்தது. இந்த சங்கீதத்தில் மூன்று பிரதானமான விண்ணப்பங்களை தேவனிடம் தாவீது வைக்கிறான்.

என்னைச் சுத்திகரியும் (வசனம் 1-7).

என்னை புதுப்பித்து, உயிர் மீட்சித் தாரும் (வசனம் 8-12)

என்னை பயன்படுத்தும் (வசனம் 13-15).

தாவீதின் பாவ அறிக்கையின் சங்கீதம் பக்தியுள்ள பரிசுத்தவான்கள் அனைவருக்கும் ஒரு எச்சரிக்கை. இது ஒரு "மாதிரி பாவ அறிக்கையின் ஜெபம்" என்றே கூறலாம்.

எருசலேமில் சிங்காசனத்தில் அமர்ந்தபின்பு தாவீதுக்கு வந்த அவலம், பரிசுத்தாவியின் அபிஷேகத்தைப் பெற்று பரமன் இயேசுவின் இரண்டாம் வருகைக்காக எதிர்பார்த்துக் காத்திருக்கும் பரிசுத்தவான்கள் யாவருக்கும் நேரிடாதபடி விழித்திருக்கவும், பரிசுத்த நடக்கையும் தேவ பக்தியும் உள்ளவர்களாயும் இருக்க வேண்டும்(2 பேதுரு 3:11).

தாவீதின் 73 சங்கீதங்களையும் தனித்தனியே அதினதின் பின்னணியங்களுடன் வாசித்து, தியானித்துப் பயனடைய தேவன் தாமே கிருபை தருவாராக!.

# ஜான் ஹார்ப்பர் - டைட்டானிக் ஹீரோ



டைட்டானிக் கப்பலை (Titanic ship) கட்டிய மனிதரிடம் ஒருவர் 'இது எவ்வளவு பாதுகாப்பானது' என்று கேட்டதற்கு, 'அவர் ஆண்டவர்கூட இதை மூழ்கடிக்க முடியாது' என்று ஆணித்தரமாகக் கூறினாராம். ஆனால் அந்தக் கப்பலுக்கு என்ன வாயிற்று என்பது நாம் அனைவரும் அறிந்ததே. அதில் பயணம் செய்த 1528 மக்களில், ஆறுப் பேரே காப்பாற்றப்பட்டனர். அதை திரைப்படமாக எடுத்து, Leonardo DiCaprio-யை ஹீரோவாக சித்தரித்திருந்தார்கள். ஆனால் அந்தக் கப்பலில் இருந்த உண்மை ஹீரோவைப் பற்றி பார்க்கப் போகிறோம்.

ஜான் ஹார்ப்பர் (John Harper) என்னும் அருமையான மனிதர் கிறிஸ்துவ பெற்றோருக்கு 1872-ம் ஆண்டு பிறந்தார். அவர் தனது 13-வது வயதில் கர்த்தரை ஏற்றுக்கொண்டு, நான்கு வருடங்கள் கழித்து, கர்த்தரைக்குறித்து அறிவிக்க ஆரம்பித்தார். அவருக்கு திருமணமாகி, மனைவி நான்கு வருடங்களுக்குள் மரித்துப் போனார்கள். அவர்களுக்கு நீனா (Nina) என்னும் பேர் கொண்ட அருமையான பெண் குழந்தை இருந்தது. ஹார்ப்பர், மூடிபிரசங்கியாரின் ஆலயத்தில் பேசுவதற்காக சிக்காகோவிற்கு (Chicago) அழைக்கப்பட்டிருந்தார். அதற்காக 1912-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12-ம் தேதி அவரும் அவருடைய பிள்ளை நீனாவும் டைட்டானிக் கப்பலில் ஏறினார்கள்.

எதிர்பாராத விதமாக, பனிமலையின்மீது மோதி கப்பல் மூழ்க ஆரம்பித்த போது, அவர் தனது மகள் நீனாவை உயிர்காக்கும் (Life Boat) படகில் ஏற்றிவிட்டு, 'நான் உன்னை ஒரு நாள் காண்பேன்' என்றுச் சொல்லி, அனுப்பி வைத்தார். அவருக்கும் படகில் போக இடமிருந்தாலும், அவர் மற்ற மக்களை காக்கும் பொருட்டு அதை விட்டுவிட்டு, தன் மகளை அனுப்பி வைத்தார். பின் மரணபயத்தோடு இருந்த மக்களிடம் வந்து, 'பெண்களும், சிறுபிள்ளைகளும், இரட்சிக்கப்படாதவர்களும், முதலில் உயிர்காக்கும் படகில் ஏறுங்கள்' என்று அவர் கூறிக்கொண்டு இருக்கும்போதே கப்பல் மூழ்க ஆரம்பித்தது. கப்பலில் இருந்த பயணிகள், கீழே ஐஸ் தண்ணீரில் குதிக்க ஆரம்பித்தார்கள். அதில் ஹார்ப்பரும் ஒருவராவார்.



அந்த நடுங்கும் குளிரிலும் ஹார்ப்பர், மக்கள் அந்த குளிரில் உறைந்து மரிக்குமுன்னே, அவர்களை கிறிஸ்துவுக்குள் வழிநடத்த ஆரம்பித்தார். அப்போது, ஒரு இளம் வாலிபன், அங்கிருந்த ஒரு கட்டையின் மேல் ஏறி தப்பும்படி போராடிக் கொண்டு இருப்பதைக் கண்டார். அவனிடம், 'நீ இரட்சிக்கப்பட்டாயா? என்றுக் கேட்டார்'. அவன் இல்லை என்றுக் கூறினான். உடனே தன் மேலே இருந்த உயிர்காப்பு மிதவை ஆடை (Life Boat) எடுத்து

அந்த வாலிபனுக்கு கொடுத்து, 'என்னைவிட உமக்குத்தான் அது தேவை' என்று கூறிவிட்டு, மற்ற பயணிகளுக்கு சத்தியத்தைச் சொல்லச் சென்றார். பின் மீண்டும் அந்த வாலிபனிடம் வந்து, அவனுக்கு சத்தியத்தைச் சொல்லி, கிறிஸ்துவுக்குள் அவனை வழிநடத்தினார். அன்று மூழ்கின 1528 பேரில் ஆறுப் பேரே காப்பாற்றப்பட்டனர். அதில் அந்த வாலிபனும் ஒருவன்.

நான்கு வருடங்கள் கழித்து, அந்த ஆறுப்பேரையும் சேர்த்து நடந்தக் கூட்டத்தில் அந்த வாலிபன் கண்ணீரோடு எழுந்து நின்று, தனக்கு ஏற்பட்ட அனுபவத்தையும், ஹார்ப்பர் எப்படி அந்த பனிநீரிலும், மற்றவர்களுக்கு சுவிசேஷத்தைக் கூறினார் என்பதையும், அவர் நீந்த முடியாமல் கடைசியில் பலவீனமடைந்து, தண்ணீரில் மூழ்கும் நேரம் வந்தபோது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசியுங்கள், அப்போது நீங்கள் இரட்சிக்கப் படுவீர்கள் என்று கூறிக் கொண்டே மூழ்கியதையும் நினைவு கூர்ந்து கதறினான். மற்றவர்கள் தங்கள் உயிரைக் காப்பாற்ற எப்படியாவது உயிர் காப்பாற்றும் படகை பிடிக்க வேண்டும் என்று போராடிக் கொண்டிருந்த வேளையில் தனக்கு கிடைத்த வாய்ப்பையும் மற்றவர்களுக்கு கொடுத்து, தனது உயிரையும் கொடுத்த அற்புத மனிதரை ஹாலிவுட் படமெடுக்காம லிருக்கலாம். ஆனால், பரலோகத்தில் அவருக்கு நிச்சயம் பதில் செய்யப்படும். ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை. ஆமென்.

நிச்சயமாகவே ஹார்ப்பர் ஒரு அற்புத ஹீரோதான். ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்காக நீங்கள் எடுக்கும் பிரயாசம் என்ன?

---

2020 **ஜனவரி 15,16,17**
(புதன், வியாழன், வெள்ளி)
**மத்திய வாலிபர் முகாம்**
மதுரை

2020 **ஜனவரி 25**
(சனிக்கிழமை)
**மண்டல உபவாச நாள்**
அந்தந்த மண்டலங்களில்

---

## ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள், எனவே உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ. **1,00,000** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.

ஆசிரியர்



# சபையும் எனது உறுதிமொழியும்

**Rev. R. தாசையா**
தேனி மண்டல தலைமைப் போதகர்

கிரேக்க மொழியில் சபை **எக்கிளிசியா** (Ekklesia) என்று அழைக்கப்படுகிறது. அதாவது வெளியே பிரித்தெடுக்கப்பட்ட ஒரு கூட்டம். சத்தியத்துக்காக, பரிசுத்த வாழ்வுக்காக, தேவகாரியத்துக்காக வாழ்வதற்கு **வெளியே அழைக்கப்பட்டவர்களின் கூட்டமாகும்** (Called out People).

**இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை** (மத்தேயு16:18). இயேசுவின் மனதில் இருந்த தரிசனம் இதுவே. இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின் ஆவியானவரின் காலத்தில் இது நிறைவேறினது.இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் என்று தெரிந்திருக்கிறோம் (அப்.2:47). எனவே இயேசுவே சபைக்கு சபாநாயகர், அவரே தலை, அவரே அஸ்திபாரம் (1கொரி.3:11). இந்த திருச்சபை பக்தியடைய, விருத்தியடைய, தேவனின் நாமம் மகிமைப்பட, தேவனின் நோக்கம் நிறைவேறவே ஊழியங்களையும், ஊழியர்களையும் தேவன் ஏற்படுத்தினார் (எபேசியர் 4:11-13).

நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடையநிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர் சிலரை **அப்போஸ்தலராகவும்** (அனுப்பப்பட்டு பலஇடங்களில் திருச்சபைகளை ஸ்தாபித்துக்கொண்டே இருப்பவன்), சிலரை **தீர்க்கதரிசிகளாகவும்** (தேவனிடத்திலிருந்து வார்த்தையைப் பெற்று பக்திவிருத்தி, ஆறுதல், புத்தி, சீர்திருத்தம் உண்டாக்குபவன்), சிலரைச் **சுவிசேஷகராகவும்** (சொல்லப்படாத, அறியப்படாத, அவசியமான இடம், மக்கள், தேசம் இங்கு சுவிசேஷம் அறிவித்து இயேசுவை ஜனங்கள் ஏற்றுக்கொள்ளச்செய்து, வியாதிகளில் இருந்து விடுதலை, அசுத்த வல்லமைகளிலிருந்து அற்புதம், பாவ உணர்வை உண்டாக்குபவன்), இவர்களுக்கு சபை நடத்தவோ, சபை ஆரம்பிக்கவோ, இவர்களிடம் வரும் நபர்களை சபையார் என்று அழைக்கவோ உரிமம் வேதத்தின்படி இல்லை. சிலரை **மேய்ப்பராகவும்** (மந்தையைக் காக்கிறவன், மேய்க்கிறவன், போஷிக்கிறவன், வசனத்தால், போதனையால், சத்தியத்தால், எச்சரித்து, கடிந்துகொண்டு அன்புசெலுத்தி, மனதுருக்கம் கொண்டு தகப்பனாக, தாயாக இருப்பவர்), **போதகராகவும்** ஏற்படுத்தினார் (போதிப்பவர், உபாத்தியாயர்) (1 கொரிந்தியர் 12:28-30).

இந்த வசனங்களிலேயே பவுல் அழைப்பை பற்றியும் பல்வேறு வகை ஊழியங்கள் பற்றியும் தெளிவாக திருச்சபைக்கு ஆதாரத்துடன் எடுத்துக் காட்டியுள்ளார். இன்றைய காலத்தில் தேவஜனங்களுக்கும், தேவ ஊழியனுக்கும் இதில் யார் எதற்காக அழைக்கப்பட்டார்கள், அவர்களுக்கு தேவன் எந்த ஊழியத்தை செய்ய தந்திருக்கிறார் என்கிற பகுத்தறிவு தேவைப்படுகிறது. குறிப்பிட்ட இந்த வசனத்தில் (1 கொரி.12:29,30) **எல்லாரும்** என்கிற வார்த்தை ஏழு தடவை வருகிறதை கவனித்தால் இந்தகடைசிக் காலத்தில் தேவஜனங்களுக்கு ஊழியர்களையும், ஊழியங்களையும் நிதானிக்கும் தன்மை தேவை என்பது எளிதில் புரிகின்றது.

இது இப்படி இருக்க வரங்கள் அனைத்தும், திருச்சபை பக்திவிருத்தி அடைந்து, திருச்சபையின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காகவே கொடுக்கப்பட்டது என்பதை மறக்ககூடாது (2பேது.1:10; 1பேது.4:10,11; ரோமர்12:6-8; 1கொரி.12:8-10). இன்று **அழைப்பு இல்லாமலேயே ஊழியம் செய்கிறவர்கள்** நம்மிடம் உண்டு. **அழைக்கப்பட்டும் என்ன அழைப்பு என்று தெரியாமலேயே** ஊழியம் செய்கிறவர்கள் இருக்கிறார்கள். **அழைக்கப்பட்டு சரியான ஊழியம் செய்பவர்கள்** எப்பொழுதுமே தேவனுக்கு மகிமையை கொண்டு வரவும், ஆத்தும அறுவடை தான் பிரதான தேவை என்று உணர்ந்து, சபையில் இருப்பதும், சபையில் சேர்ப்பதுமே சரி என்ற நிலையில் உள்ளவர்களே திருச்சபை வளர்ச்சிக்கு ஆசீர்வாதமாக இருப்பார்கள்.

கிறிஸ்துவின் பிரதான நோக்கம் சபையே., ஆனால் சபையை கறைப்படுத்த, களங்கப்படுத்த, சபையை சிதறடிக்க பவுலின் காலத்திலேயே கள்ளச் சகோதரர்கள், கள்ளத் தீர்க்கதரிசிகள், கள்ளப் போதகர்கள், கள்ள உபதேசங்கள் பெருகியிருந்ததாக வேதத்தில் பார்க்கிறோம் (2கொரி.11:13.) சபையை கிறிஸ்து தமது இரத்தத்தால் **சம்பாதித்தார்** (அப்.20:28). கிறிஸ்து சபைக்காகவே தன்னை **முழுவதுமாய் ஒப்புக்கொடுத்திருக்கிறார்** (எபே.5:27; 23-29). கிறிஸ்து சபையில் அன்பு கூர்ந்திருக்கிறார், மகிமையுள்ள சபையாக தமக்கு முன் நிறுத்த அனைத்தையும் செய்துகொண்டிருக்கிறார். கர்த்தர் சபையை **போஷிக்கிறார்,** சபையை **பாதுகாக்கிறார்** (நீதி.27:23-27; 1தீமோ.3:15). தேவனுடைய சபையை சத்தியத்துக்குத் தூணாக, ஆதாரமாக மாற்றி வருகிறார். கிறிஸ்து இன்னமும் ஆவியானவர் மூலம் சபைக்கு **செய்தி தந்து கொண்டே இருக்கிறார்.** சபையின் குறைவுகளை ஆவியானவர் சரிப்படுத்துவார். அவரது சபையை எதுவும் மேற்கொள்ள முடியாது (வெளி.1:11,20).

கலாத்தியர் 2:4-ன்படி பக்கவழியாய் நுழைகின்ற உபதேசங்களுக்கும், உபதேசக்காரர்களுக்கும் குறிப்பாய் வீடியோ மூலமாய் வரும் செய்திகளை குறித்தும் மிகுந்த கவனம் தேவை. தொலைகாட்சி செய்திகளிலோ, இன்டர்நெட் மூலம் வரும் செய்திகளிலோ அதிக நாட்டம் செலுத்தாதீர்கள். இன்றைய வீடியோ செய்தியாளர்களில் அநேகர் முறையான வேத அறிவு இல்லாமல் தங்களுக்கு தெரிந்த விதத்தின்படியெல்லாம் வசனங்களை வியாக்கியானம் செய்து திருச்சபையை விட்டு ஜனங்களை பிரிக்கின்றனர். இது பிசாசை நம் வீட்டிற்கு கொண்டு வரும் நூதனவழி. (2பேதுரு.2:1 முதல் 3 வசனம் வரை)

சொல்லப்பட்டபடி கள்ள தீர்க்கத்தரிசிகளும், ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள்; அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப் போதகர்கள் இருப்பார்கள்; அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப் புரட்டுகளைத் தந்திரமாய் **நுழையப்பண்ணி,** தங்களை கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக்கொள்ளுவார்கள். அவர்களுடைய கெட்ட நடக்கைகளை அநேகர் பின்பற்றுவார்கள்; அவர்கள் நிமித்தம் **சத்தியமார்க்கம் தூஷிக்கப்படும்.** பொருளாசையுடையவர்களாய், தந்திரமான வார்த்தைகளால் உங்களைத் தங்களுக்கு ஆதாயமாக **வசப்படுத்திக்கொள்ளுவார்கள்** (சிக்காதே).

பவுல், நான் போன பின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, திருச்சபையை தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன் என்றார். எனவே, இந்த கடைசி காலத்தில் நூதன உபதேசங்களுக்கும், உபதேசக்காரர்களுக்கும் சபையில் இருக்கும் நீங்கள் கவனமாக இருந்து பிழைத்து, தழைத்து, செழித்து, விழித்திருக்க வேண்டியது நமது கடமை. எனவே தினந்தோறும் சபையைக் குறித்த ஓர் உறுதிமொழியை இந்த 2020-ம் ஆண்டு நிறைவேற்றுவோமாக.

## தினந்தோறும் சபையைக் குறித்த எனது உறுதிமொழி நான் சபையில் பின்பற்ற வேண்டிய 11 காரியங்கள்

1. சபைக்கும் எனக்கும் உள்ள தொடர்புதான் தேவன் எனக்குத் தரும் ஆசீர்வாதம்.
2. நான் என் பிள்ளைகளுக்குத் தரும் சொத்து, அவர்களுக்கும் என் சபைக்கும் உள்ள தொடர்பு ஆகும்.
3. தேவன் என் மேல் அன்பாய் இருப்பதையும், நான் தேவன் மேல் அன்பாய் இருக்கிறேன் என்பதையும் நான் சபைக்குத் தவறாமல் வருவதன் மூலம் நிரூபிக்க முடியும்.
4. என்னில் ஆவிக்குரிய காரியங்களில் வளர்ச்சி காணப்படுகிறது என்பதை நான் சபையில் ஆராதிப்பதே நிரூபிக்கும்.
5. எனக்கு தேவன் மீது தாகம் இருக்கிறது என்பது, நான் சபையில் செய்யும் ஊழியம் மூலம் நிரூபிக்கப்படுகிறது.
6. பரிசுத்த ஜீவியத்துக்கு ஒரு ஆதாரம் சபை.
7. சாத்தான் என்னோடு அதிகமாய் போராடுவதன் பிரதான நோக்கம் என்னை சபையிலிருந்து பிரிப்பதே. அதைமீறி நான் சபையில் நாட்டப்படுவதே ஆசீர்வாதம்.
8. நான் சபையோடு ஐக்கியப்படுவதே தேவனின் பிரதான நோக்கம்.
9. இந்த உலகத்தின் பாடுகளை, நான் சபையில் வந்து ஆராதிப்பதால் பெறும் பெலத்தினாலே ஜெயிப்பேன்.
10. எந்த சூழ்நிலையிலும் நான் சபையை விட்டு விலகமாட்டேன்.
11. என் சுபாவங்களில் மாற்றம், தேவனுடைய சபைக்கு வந்து போவதினாலேயே ஆகும்.



# எலியா - நம்மைப் போன்றவரா?
அல்லது
# நாம் - எலியாவைப் போன்றவர்களா?

Rev. ஆலன் பிராஸ்பர்
இயக்குநர், தமிழ் பிரதேச ஆண்கள் ஐக்கியம்

யாக்கோபு தமது நிருபத்தில் , எலியா நம்மைப் போன்ற ஒரு மனிதர் (கிரேக்க மொழி=“ஒத்த உணர்வுடையவர்”) எனக் குறிப்பிட்டுள்ளார் (யாக்கோபு 5:17). இருப்பினும் தமது ஜெபவாழ்வில் தரித்திருந்து, மழையைப் பெய்யப்பண்ணவும் நிறுத்துவும் கூடிய அதிகாரத்தைப் பெற்றிருந்தார். இன்னும் ஒரு கட்டத்திற்கு மேற்சென்று வியக்கும் வகையில், வானத்திலிருந்து அக்கினியையும் தண்ணீரையும் வரப்பண்ணினார். அவரது வாழ்க்கையை நாம் உற்று நோக்கினால், ஒரு சவாலான கேள்வி நம்முன் எழும். எலியா நம்மைப் போன்றவரா? அல்லது நாம் எலியாவைக் போன்றவர்களா? என்று! அவர் நம்மைப் போன்ற சாதாரண மனிதனாய் தேவனைப் பின்பற்றினாலும், அவருடைய வாழ்க்கை பயணம் தீர்க்கதரிசியாகவும் தனித்தன்மை வாய்ந்ததாகவும் இருந்ததை நம்மால் மறுக்க இயலாது. தேவனுடைய தீர்க்கதரிசியாய் இராஜாவுக்கும் தேசத்திற்கும் அவர் கூறிய எச்சரிக்கையையும் செய்திகளையும் தவிர்த்து, எலியா நாம் பின்பற்றக்கூடிய ஓர் எடுத்துக்காட்டாகவே திகழ்கிறார்.

**எலியாவின் தனித்துவப் பண்புகள் :**

- எலியாவின் பிறப்பு மற்றும் பெற்றோரைக் குறித்தக் குறிப்புகள் எதுவுமில்லை.
- யாவே கடவுள் என்று பொருள்படும் தமது பெயருக்கு ஏற்றபடி வாழ்ந்தார்.
- எலியாவின் துவக்கத்தைப் போலவே அவரது முடிவும் இயற்கைக்கு முரணானதாக இருந்தது. (மரணத்தை பார்க்கவில்லை).
- எலியாவின் வாழ்க்கையின் முதற்பகுதியில் மனித நட்புகளோ, உறவுகளோ இருந்ததில்லை. ஆனால் இரண்டாம் பகுதியில் சீடர்களாக தீர்க்கதரிசிகளைத் தன்னுடன் கொண்டிருந்தார்.
- எலியா தேவனின் கட்டளைகளில் மூன்றாவதை மட்டுமே நிறைவேற்றினார். அதாவது எலிசாவை தமது சீடராக அபிஷேகம் செய்தார். முதல் இரண்டு கட்டளைகளை எலிசா மற்றும் மற்ற தீர்க்கதரிசிகள் நிறைவேற்றினர்.
- புதிய ஏற்பாட்டில் எலியாவைப் பற்றி இயேசுவும் (லூக்கா 4:25,26). அப்போஸ்தலனாகிய பவுலும் (ரோமர் 11:2-4) கூறியுள்ளனர். மேலும், யோவான் ஸ்நானனை புதிய ஏற்பாட்டின் எலியா (மத்.11:13,14; 16:14; 17:10; மாற்கு 9:11; 15:35; லூக்கா 9:7,8; யோவான் 1:21) என்று வேதம் கூறுகின்றது.
- எலியா, மனிதர்களுடன் உறவாடியதை விட தேவனுடன் அதிகமாக உறவாடியதை வேதம் கூறுகின்றது. தேவனுக்கும் எலியாவுக்கும் இடையேயான உறவு பலம் பொருந்தியதாக இருந்ததை நாம் வேதத்தில் காண இயலும்.
- எலியா தேவ வல்லமைப் பெற்ற மனிதனாக இருப்பினும், தாகம், பசி, ஏமாற்றம், தனிமை, ஏக்கம் என்று வாழ்வின் வலிகளை உணர்ந்தவராகவே இருந்தார். தமது தேவைகளுக்காக ஒருபோதும் தேவனுக்கு விரோதமாக முறுமுறுத்ததில்லை.

- தாம் உடுத்தும் உடை, உண்ணும் உணவு, போக்குவரத்து மற்றும் உயர் அதிகாரத்தில் உள்ளவர்களிடம் பெறும் உதவி என்று எலியா எதிலும் மனிதரை சார்ந்திருக்கவில்லை. ஆகாபின் இரதத்தைவிட தனியாக, வேகமாக ஓடி, 400 கி.மீ. தொலைவில் இருந்த ஓரேப் பர்வதம் மட்டும் ஓடினார்.
- எலியா, வடக்கு தேசத்தைச் சார்ந்த, கடவுள் என்று கருதப்பட்ட விக்கிரகங்களுக்கு எதிராக நின்று, தேவ வல்லமையைக் கொண்டு அற்புதங்களையும் செய்தார்.
- பாகாலுக்குமுன் பணியாத 7000 நபர்களின் சார்பாக தனி நபராய் ஆகாபின் முன் நின்றார்.
- ஆகாபின் மகனான அகசியாவின் ஆட்களுக்கு தம்மை மறைத்து மீண்டும் வெளிப்படுத்தியதின் மூலம் கர்மேல் மலையில் தேவனுடன் அவர் தனியாக நேரம் செலவழித்ததை நாம் அறிய முடிகிறது (1 இராஜா. 21:28).

எலியா ஒரு தீர்க்கதரிசியாக தன் அழைப்பில் மாறாமல் எப்பொழுதும்

➤ கர்த்தருக்காக ➤ கர்த்தருடன் ➤ கர்த்தருக்குமுன் நின்றார்

**சிந்தனைக்குரிய கேள்விகள் :**

1. வலிகளும், தேவைகளும் நம் வாழ்க்கைப் பயணத்தின் ஒரு பங்காக இருந்தாலும் அவை சாபமல்ல, தேவன் நம் வாழ்க்கையில் அற்புத விதமாய் செயல்பட்டு, அவற்றை சரி செய்யவோ அல்லது பொறுத்துக்கொள்வதற்குரிய பெலனையோ தருவார். வேதத்தை சார்ந்து கிறிஸ்துவின் சிலுவைப்பாடுகளைக் குறித்த நம் புரிதல் என்ன?
2. நம் தனிப்பட்ட வாழ்வில் தேவனுடன் நாம் கொண்டுள்ள தொடர்பானது, நம் பொதுவாழ்வில் தேவனை நாம் ஏற்றுக் கொண்டிருப்பதைப் பிரதிபலிக்கும். நாம் கிறிஸ்துவைப் பிரதிபலிக்கிறோமா?
3. நம்மைக் குறித்த எத்தகைய மரபினை நாம் நம் சந்ததிக்கு விட்டுச் செல்கிறோம்?
4. நம் பிள்ளைகள். நம் வாழ்க்கையில் இருக்கும் இயேசுவின் கிருபையையும் அபிஷேகத்தையும் வாஞ்சித்து, நம்மைச் சார்ந்து இருக்கிறார்களா?
5. நாம் பிறருக்கு ஆசீர்வாதமாக இருக்கின்றோமா? அல்லது பிறரிடமிருந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்கிறவர்களாக இருக்கின்றோமா?
6. கிறிஸ்துவுடன் நாம் நடக்கும் நடையின் எல்லைக்கோடும் தனித்தன்மையும் என்ன?
7. நம்மைக் குறித்துப் பிறர் பேசினால், நம்மிடம் இருக்கும் எந்த குணநலன் தனித்தன்மை வாய்ந்ததாக இருக்கும்?
8. நம் வாழ்க்கையில் கர்த்தரின் நோக்கத்தை நிறைவேற்றுகின்றோமா? இயேசுவின் வருகைக்குத் தயாராக இருக்கின்றோமா?
9. எலியாவுக்கு சீடர்கள் இருந்தனர். அதே மரபு புதிய ஏற்பாட்டிலும் பின்தொடரப்பட்டது. இன்று நாமும் அம்மரபினைப் போன்ற சீடர்களை உருவாக்குகின்றோமா?
10. இன்று நாம் வாழும் சமூகத்தைக் குறித்த நமது கண்ணோட்டம் என்ன? இன்றைய காலக்கட்டத்தில் எலியாவாக நாம் இருந்தால் நம் சமூகத்திற்கு நமது அணுகுமுறை என்ன?

**எலியா – நம்மைப் போன்றவரா அல்லது நாம்– எலியாவைப் போன்றவர்களா?**



# சீஷர்களை உருவாக்குவதில் சபைக்குள்ள பொறுப்பு

Rev. J. தேவதாசன் கலையரசன்
மூத்த போதகர், பெத்தேல் ஏஜி. சர்ச், குளத்தூர்

சீஷர்கள் என்றால் யார்? என்பதில் உள்ள சரியான புரிதல் அல்லது தவறான புரிதல்தான், உங்கள் சபைக்கு எப்படிப்பட்ட சீஷத்துவக் கல்வி வேண்டும் என நிர்ணயிக்கிறது என்பதை அறிவீர்களா? சீஷத்துவப் பயிற்சி என்பது புதிதாக இரட்சிக்கப்பட்டவர்களுக்கான ஆரம்ப நிலைப்பாடம் என்ற தவறான கருத்து அநேக சபைகளில் காணப்படுவதற்கு காரணம் என்ன? உலகெங்கிலும் வெளிவந்துள்ள சீஷத்துவ கல்வி உபகரணங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையின் ஆரம்ப நிலை விசுவாசமும், அடிப்படை உபதேசமும் என்று மட்டும் சுருங்கிப்போவது ஏன்? அதனால் ஏற்படும் நன்மை தீமை என்ன? என்பதை சபை கண்டு அறிய வேண்டும். இது அவசரமானது, அவசியமானது. இல்லாவிடில் சபையில் சீஷர்கள் எனப்படுவோர் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவில்தான் இருப்பார்கள். பார்வையாளர்கள் மற்றும் கிறிஸ்துவின் அபிமானிகள் சபைகளில் நிறைந்து இருப்பார்கள். உங்கள் சபையில் சீஷர்கள் பெருகினார்கள் என்ற நிலையையடைய விரும்பினால் தொடர்ந்து இக்கட்டுரையை வாசியுங்கள்.

## தவறான புரிதலிலிருந்து - சரியான புரிதலுக்குள் வாருங்கள்

1. சீஷன் என்ற பதத்திற்கு கொடுக்கப்படும் அளவுக்கதிகமான முக்கியத்துவமே சில சமயங்களில் சீஷர் என்ற நிலையுடைய சில விசுவாசிகளுக்கு இடறலாக இருக்கிறது. சீஷரைக் குறிக்கும் மத்தடீஸ் போன்ற பதம் புதிய ஏற்பாட்டில் சுவிசேஷங்களிலும், அப்போஸ்தல நடபடிகளில் மட்டுமே காணப்படுகிறது. அந்தப்பதத்திற்கு, அளவுக்கு அதிகமாக முக்கியத்துவம் கொடுக்கும் சபைகளில் சீஷத்துவம் என்பது ஒரு வாழ்க்கை முறையாக அல்ல, பதவியாக கருதப்படும் அபாயம் ஏற்படுகிறது.

- அப்போஸ்தல நடபடிகள், 2-ம் அதிகாரத்தில், சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள் (2:41). விசுவாசிகள் எல்லோரும் (2:44) தங்களைச் சார்ந்தவர்கள் (4:23) சபையாரெல்லாருக்கும் (5:11) சீஷர்கள் (6:1) என்று சொல்லப்பட்டிருப்பதைப் பாருங்கள். ஒட்டுமொத்த சபையாரும் சீஷர்கள் என்றழைக்கப்பட்டிருக்கிறார்கள்.
- இன்று நாம் அதை ஒரு தனித்தகுதியுள்ள, பதவியாக மாற்றிவிட்டோம். சபையாருக்கும் நான் விசுவாசிதான் இன்னும் சீஷராகவில்லை என்ற குற்ற உணர்வை ஏற்படுத்திவிட்டோம். சீஷராக - சீஷராக்குவதற்குரிய வாழ்க்கை வாழ வேண்டும் என்ற விருப்பமும், தீர்மானமும் எடுப்பதும் நல்லதுதானே, அவசியம் தானே? நிச்சயம் நல்லதுதான். ஆனால் நம்மாலெல்லாம் சீஷராகவே முடியாது என்ற பயத்தை அவிசுவாசத்தை விசுவாசிக்களுக்குள் ஏற்படுத்தி எதிர்வினையாக்கு வதையும் தயவுசெய்து கவனியுங்கள்.

2. பிரித்தெடுக்கப்பட்டவர்களுக்கே சீஷத்துவக் கல்வி அல்லது புதிதாக இரட்சிக்கப்பட்டவர்களுக்கே சீஷத்துவக் கல்வி தேவை என தவறாக கருதும் சபைகளால், சீஷத்துவக் கல்விக்கும் பொருத்தமான பாடத்திட்டத்தைத் தேடியே காலம் முடிந்து விடுகிறது.

- கிறிஸ்தவ வாழ்க்கையின் முழுச்சித்திரத்தின் ஒட்டு மொத்த போதனையே சீஷத்துவப் போதனை, சீஷத்துவப் பயிற்சி என்பதை நீங்கள் புரிந்துகொள்ளும் போதே உங்கள் சபையின் சீஷத்துவ கல்வி சரியான பாதையில் பயணிக்கும்.

- கிறிஸ்தவ வாழ்க்கையை ஒரு முழு சித்திரமாக உங்கள் கண்முன் கொண்டு வாருங்கள். இயேசுவை ஏற்றுக்கொள்வதில் துவங்கி, அவர் மேலுள்ள விசுவாசத்தில் நிலைத்திருப்பது. அவரைத் தொடர்ந்து பின்பற்றுவது, அவருக்காக வாழ்வது, அவர் தரும் இம்மைக்குரிய பலன்களை மட்டுமல்ல, நித்திய பலன்களை அனுபவிக்க காத்திருப்பது போன்ற தொடர் அனுபவங்கள் கண்முன் வரும். இத்தொடர் அனுபவங்களை அனுபவிக்கும் ஒருவரைத் தான் உண்மைக் கிறிஸ்தவர் என்கிறோம். அதாவது உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்பவரே சீஷர் என்கிறோம். இத்தொடர் அனுபவங்களுக்குரிய போதனைகளை பாடங்களைத்தான் கிறிஸ்தவ கல்வி என்று அநேக சபைகளில் கற்பிக்கிறார்கள். எனவே சீஷத்துவத்திற்கு ஏதோ ஒரு தனித்துவமான பாடம் இருக்கிறது என்று காத்திராமல், கிறிஸ்தவ வாழ்க்கையை, ஒருவருக்கு புரியவைத்து, கிறிஸ்துவுக்காக வாழ வைத்து ஒட்டுமொத்த சபையை சீஷர்களால் நிரப்ப வேண்டும்.

3. இயேசு கிறிஸ்துவின் மாதிரியை மறந்துபோனது மற்றொரு தவறு. அவர் சீஷர்களை உருவாக்க மூன்று முழு வருடத்திலும் போதித்துக்கொண்டேயிருந்தார். தனது பயிற்சிக்கொடுக்கும் காலம் முடிவடைந்தது என்ற நிலை வந்தபோது பிதாவிடம் ஒப்படைத்தார் (யோ.17:9,19) பரிசுத்த ஆவியானவர் போதிப்பார் என உறுதி கொடுத்தார் (யோவான் 16:12,13). அவர் கிறிஸ்தவ வாழ்க்கை, சீஷத்துவம் என்பது ஒரு வாழ்க்கை முறை, அது வாழ்நாள் முழுவதும் கற்றுக்கொள்ளும் வாழ்க்கை முறை (சங்.144:1)

4. குறுகிய காலப் பயிற்சி தவறல்ல, தெரிந்தெடுக்கப்பட்டவருக்குள் பயிற்சி கொடுப்பதும் தவறல்ல, எந்த ஒரு குறுகிய கால பயிற்சியும் முன்னுரையும்-முடிவுரையும் கொண்டதாக இருக்கக்கூடாது. அப்படியே சான்றிதழுக்காக முடித்து வைக்கப்பட்டாலும், வாழ்நாள் முழுவதும் செய்ய வேண்டியுள்ள அர்ப்பணத்திற்கு வழிநடத்த உதவும் முன்னுரையுடன் முடிய வேண்டும் என்பதே இங்கு பரிந்துரைக்கப்படுகிறது.

5. சீஷர்களை உருவாக்க தரமான ஆசிரியர், பாடப்புத்தகங்கள் மட்டும் போதாது, சீஷராக விரும்பும் ஒரு விசுவாசியின் அர்ப்பணமும், ஆசிரியரின் அர்பணமும் தான் ஒருவரை சீஷராக்கும். குருவைப் பின்பற்றும் மாணவன்தான் சீஷன் என்ற பதவிளக்கம் சரிதான். ஆனால் சீஷன் என்பது அதற்கும் மேலான அர்த்தம் கொண்டது.

6. இயேசு கிறிஸ்து தனது சீஷர்களுக்கு மூன்றாம் வருடம், கடைசி வருடத்தில் (3rd year-Last semester) சொல்லிக் கொடுத்த பாடம், சீஷனின் தகுதி என்ன? **(மாற்கு 8:34).** இன்றைய சபைகள் முதல் வாரம், பயிற்சியில் சேர முன் தகுதித் தேர்வு பாடமாக (First semester-first lesson) இதை கற்பிப்பதால், யார் இதைக் கைக்கொள்வார் என்று பின்வாங்குவோர் அதிகமாயிருக்கிறார்கள்.

7. கிறிஸ்தவ கல்வியின், சீஷத்துவ கல்வியின் இறுதி நோக்கம் சீஷர்களில் கிறிஸ்துவின் சாயலை உருவாக்குவது என்றே இருக்க வேண்டும் (எபே.4:24). எனவே சீஷத்துவப் பயிற்சி என்பது வேத அறிவு வளர்க்கும் பயிற்சியாக, ஊழியத்திறமை அதிகரிக்கும் பயிற்சியாக, உபதேசங்களை மட்டும் கற்பிக்கும் பயிற்சியாக இராமல், வாழ்க்கை மாற்றத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதாக இருக்க வேண்டும்.

**இறுதியாக :** சீஷத்துவக் கல்வியென்பதில் சபை அறிந்துகொள்ள வேண்டியதையும், சபையின் பங்கு குறித்தும் விரிவாக அடுத்த கட்டுரையில் தியானிப்போம்.

# வேதாகமத்தில் காணப்படும் எழுப்புதல்கள்

வேதாகமத்தில் காணப்பட்ட சில எழுப்புதல்களை இங்கு சுருக்கமாக காண்போம்.

1. **சாமுவேல்** – இவர் தேசத்திற்கு அறிவுரை கூறி, அந்நிய தேவர்களை அகற்றி. மெய்யான ஒரே உண்மை தேவனை வழிபட, ஜனங்களை ஆயத்தப்படுத்தினபோது ஏற்பட்ட எழுப்புதல் (1 சாமு.7:36).
2. **தாவீது**-முதன் முதலாக உடன்படிக்கைப் பெட்டியானது, எருசலேமுக்குள் கொண்டு வரப்பட்டபோது ஏற்பட்ட எழுப்புதல் (1 நாளா.15:25-28; 16:1-43; 29:10-25).
3. **சாலமோன்**-தேவாலயத்தை கட்டிமுடித்து அதை பிரதிஷ்டை செய்தபோது (2 நாளா.7:1-3).
4. **ஆசா**-விக்கிரகங்களையும், சோதோமியரையும் தேசத்தைவிட்டு அகற்றி, ஜனங்களை கர்த்தரைத் தேட வைத்தபோது ஏற்பட்ட எழுப்புதல் (1 இராஜா. 15:11-15).
5. **யோசபாத்**-தேவாலயத்தைச் சுத்திகரித்து மற்றும் லேவிய ஆசாரியத்துவத்தை பரிசுத்தம் செய்ததினால், எழுப்புதலுக்கு காரணமானார் (2நாளா .19).
6. **எலியா**-கர்மேல் மலைமீது பாகாலின் தீர்க்கதரிசிகளை முறியடித்து வானத்திலிருந்து அக்கினியை ஜெபத்தால் வரவைத்தபோது ஜனங்கள் கர்த்தரே தெய்வம் என்று ஆர்ப்பரித்தபோது ஏற்பட்ட எழுப்புதல் (1 இராஜா. 18:21-40).
7. **யெகூ**-பாகால் வணக்கம் மற்றும் அவர்களது விக்கிரக தோப்பு, ஆலயங்கள் போன்றவற்றை முற்றிலும் அழித்துத் தீர்த்தபோது ஏற்பட்ட எழுப்புதல் (2இராஜா.10:17-20)
8. **யோய்தா**-பிரதான ஆசாரியராகிய இவர் விக்கிரகங்களை விட்டு திரும்பும்படி ஜனங்களை உடன்படிக்கை செய்யும்படி செய்து தேவனை ஆராதிக்க செய்தது மூலம் ஏற்பட்ட எழுப்புதல் (2 இராஜா. 11:17-20).
9. **எசேக்கியா**-தேவாலயத்தை சுத்திகரித்து பஸ்கா பண்டிகையை மீண்டும் ஏற்படுத்தியபோது ஏற்பட்ட எழுப்புதல் (2 நாளா. 29:31).
10. **யோசியா**-தேவாலயத்தை சுத்தகரித்தபோது, நியாயப்பிரமாணப் புத்தகம் கண்டுபிடிக்கப்பட்டு, அதை இராஜாவுக்கும் மற்றும் பொது ஜனங்கள் முன்னிலையில் வாசித்தபோது, அதன் விளைவாக ஏற்பட்ட எழுப்புதல் (2 இராஜா. 22-23).
11. **எஸ்றா**-இஸ்ரவேலர் புறஜாதிய பெண்களை விவாகஞ்செய்தபடியால், அவர்களை விட்டு வேறுபிரிய எஸ்றா பிரசங்கித்ததன் விளைவாக ஏற்பட்ட எழுப்புதல் (எஸ்றா 9-10).
12. **நெகேமியா**-எருசலேமின் மதில்களைக் கட்டிமுடித்த பின்னர், எஸ்றா ஜனங்கள் அனைவரின் முன்னிலையில் தேவ வசனத்தை வாசித்து போதனை செய்தபோது, பெரிய எழுப்புதல் உண்டானது (நெகேமியா 13).
13. **யோனா**-இவர் எதிர்மறையான எண்ணமுடையவராயிருந்தும், இவரது பிரசங்கமானது, பெரியதான மனமாற்றத்தை ஏற்படுத்தி நினிவே பட்டணத்தில்

வாழ்ந்து வந்த அசீரியர்கள் நடுவே பெரிய எழுப்புதலை உண்டாக்கிற்று (யோனா 3).

14. **எஸ்தர்**-ஆமான் தன் பதவியிலிருந்து தூக்கியெறியப்பட்டு, யூதர் மனந்திரும்பி பூரீம் பண்டிகை கொண்டாடியபோது ஏற்பட்ட எழுப்புதல் (எஸ்தர் 9:17-22).

15. **யோவான் ஸ்நானன்**-மேசியாவின் வருகையைக் குறித்து பிரசங்கித்து, ஜனங்களை மனந்திருந்துமாறு பிரசங்கித்தபோது ஏற்பட்ட எழுப்புதல் (லூக்கா 3:2-18)

16. **இயேசு**-சமாரிய ஸ்திரீயுடன் பேசிமுடித்த பின்னர் சமாரியாவில் ஏற்பட்ட எழுப்புதல் (யோவான் 4:28-42).

17. **பேதுரு**-பெந்தெகொஸ்தே நாளில் இவரது பிரசங்கத்திற்கு பின் 3000 பேர் மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டபோது ஏற்பட்ட எழுப்புதல் (அப். 2).

18. **பிலிப்பு**-இவர் தேவனது இராஜ்ஜியத்தைக் குறித்து சமாரியாவில் செய்த பிரசங்கத்தினால் அங்கு ஏற்பட்ட எழுப்புதல் (அப். 8:5-12).

19. **பேதுரு**-லித்தாவிலே ஐனேயா என்கிற மனிதனை குணமாக்கிய, லித்தாவிலும், சாரோனிலும் ஏற்பட்ட எழுப்புதல் (அப். 9:32-35)_

20. **பவுல்** - மூன்றாவது மிஷனரி பயணத்தின்போது எபேசுவில் மாயவித்தைக் காரராயிருந்த அநேகர் தங்கள் புஸ்தகங்களை சுட்டெரித்தபோது நிகழ்ந்த எழுப்புதல் (அப்.19:11-20).

---

## மருத்துவக் குறிப்புகள்

### சாப்பிட்ட பிறகு செய்யக்கூடாதவைகள் அவசியம் அறிவோம்! பல நோய்களை தவிர்ப்போம் !!

1. சாப்பிட்டவுடன் தண்ணீரை வயிறுமுட்ட குடிக்கக்கூடாது. இதனால் ஜீரணநீர் நீர்ந்து போய் அஜீரணமாகும். பல நோய்கள்வர இது முக்கிய காரணமாக அமையும்.
2. சுமார் 40 நிமிடம் கழித்து தண்ணீர் தாகம் எடுக்கும்போது அப்போது குடிக்க வேண்டும்.
3. சாப்பிட்டதும் படுத்துவிடக்கூடாது. காரணம் குடல் செயல்பட மிகவும் சிரமப்படும். ஜீரணம் முறையாக நடக்காது.
4. குறைந்தது ஒரு மணிநேரம் கழித்தே உறங்க வேண்டும். இது மதியம் ஓய்வு எடுப்பவர்களுக்கும் பொருந்தும்.
5. சாப்பிட்டதும் குளிக்கக் கூடாது. குறைந்தது 2 மணிநேரம் கழித்தே குளிக்க வேண்டும்.
6. சாப்பிட்டு முடித்ததும் எந்த பழங்களையும் சாப்பிடக் கூடாது. காரணம் உணவின் ஜீரண நேரம் குறைந்தது 5 மணி நேரங்களாகும். பழங்களின் நேரம் அதிகபட்சம் 2 மணி நேரம் தான். இந்த வித்தியாசத்தால் நாம் சாப்பிட்ட பழம் வாயுவாக மாற்றம் பெரும். இதில் ஒரு பழத்துக்கு மட்டும் விதிவிலக்கு அது பேரீச்சம்பழம்.
7. சாப்பிட்ட உணவு ஜீரணமாகாத நிலையில் வேறு உணவுகள் எதையும் உண்ணக்கூடாது. காரணம் இவ்வாறு சாப்பிட்டால் ஏற்கனவே சாப்பிட்ட உணவு ஜீரணத்தை கடுமையாக பாதிக்கும். இதனால் சுகர் பிரச்சனை வர காரணமாக அமையும்.
8. குளிர் பானங்கள், ஐஸ்கிரீம், ஐஸ்வாட்டர் இவைகளையும் குடிக்கக் கூடாது. காரணம் உணவு ஜீரணமாக நமது குடலில் வெப்பம் இருக்கவேண்டும். அந்த வெப்பத்தை இந்த குளிர்பானங்கள் இல்லாமல் செய்துவிடும்.
9. சாப்பிட்டதும் பரபரப்பாக இயங்குவதோ நடப்பதோ பளுவானவற்றை தூக்குவதோ கூடாது. காரணம், அவ்வாறு செய்தால் உணவு கீழ்நோக்கி செல்லாமல் மேல் நோக்கி வரும். இதனால் நெஞ்சு எரிச்சல் வாயு தொல்லைகள் ஏற்படும்.

---

# வேதத்திலிருந்து பெருமளவு நன்மை பெற ஏழு படிகள்

தேவன் மனிதனுக்குக் கொடுத்த மிகப் பெரிய பரிசுகளில் ஒன்று பரிசுத்த வேதாகமம். ஆகவே நாம் அதை வாசிப்பதிலும், படிப்பதிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும். இந்த ஆண்டில் வேதத்தில் எழுதப்பட்ட செய்திகளிலிருந்து பெருமளவு நன்மை பெற இதோ ஏழு படிகள்.

**1. அங்கீகரியுங்கள் (Receive)** : வேதத்தை வாசிக்கும் பொழுது அது சிறப்பாக உங்களுக்கென்றே வரும் தேவ செய்தியாக ஏற்றுக் கொள்ளுங்கள். வசனத்தை விசுவாசத்தோடும் (எபி. 4:2), எல்லாச் சாந்தத்தோடும் (யாக். 1:21) ஏற்றுக் கொள்ளுங்கள். வசனத்துக்கு நடுங்குகிறவர்கள் தேவனுக்குப் பிரியமானவர்கள் (ஏசா.66:1,2). வேத வசனத்துக்குக் கீழ்ப்படிந்து அதற்கு அடிபணிவோர் வாழ்வில் வசனம் அற்புதங்களைக் கொண்டு வரும்.

**2. அசைபோடுங்கள் (Ruminate)** : இது தான் தியானித்தல் என்பது. பசுமாடு அசைபோடுவது போல் நாமும் கேட்டதைத் திரும்பத் திரும்பச் சிந்திக்க வேண்டும். வேலைகள் மிகுதியாவதால் விசுவாசிகள் இக்கலையை இன்று மறந்து வருகின்றனர். தியானமானது இருதயத்தைக் கீழ்ப்படிதலுக்கு நேராய் நடத்துகிறது. வேலைக்கு வெளியே செல்லும் போது, காலையில் வேதத்திலிருந்து வாசித்ததை இருதயத்தில் சுமந்து செல்லுங்கள் (யோசுவா 1:8; சங். 1:2; 119:97).

**3. ஆராய்ந்து பாருங்கள் (Refer):** வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் என்றார் இயேசு (யோவான் 5:39). கர்த்தருடைய புத்தகத்திலே தேடி வாசிக்க வேண்டும் (ஏசா.34:16). வசனத்தை வசனத்தோடு ஒப்பிட்டுப் படிக்க வேண்டும். ஒரு பகுதியை இன்னொரு பகுதி விளக்கும். தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால் பெரோயா பட்டணத்தார் தெசலோனிக்கேயரைவிட நற்குணசாலி களாயிருந்தனர். (அப். 17:11).

**4. அப்பியாசியுங்கள் (Reform)** : வெறும் அறிவு இறுமாப்பை உண்டாக்கும். அறிவு அனுபவமாக வேண்டும். அறிந்து கொண்ட சத்தியம் கீழ்ப்படிதலுக்கு நேராக நடத்த வேண்டும். வாழ்வு மறுரூபமாக வேண்டும். வேதத்தை ரசித்தால் போதாது, அதை ருசிக்கவும், அப்பியாசிக்கவும் வேண்டும்! கேட்பது, வாசிப்பது, தியானிப்பது ஆகியவற்றிலிருந்து தெளிவான கட்டளைகள் உண்டா என்று கவனியுங்கள். கீழ்ப்படியத் தாமதம் வேண்டாம். ஒவ்வொரு கீழ்ப்படிதலும் புதிய வெளிப்பாடுகளைக் கொண்டு வரும்.

**5.அகற்றுங்கள் (Remove)** : வசனமென்பது விதையாகும். நமது வாழ்வே நிலமாகும். நாம் கனிநிறைந்திருக்க வேண்டுமென்பது தேவனது விருப்பம். ஆனால் நாம் கனி கொடுக்க, அகற்றப்பட வேண்டிய சில தடைகள் உண்டு. அவிசுவாசிகளின் ஐக்கியம் (சங்.1:1), உலக சிந்தை, பொருளாசை (மத். 13:22), உறவுப் பிரச்சனைகள் (1 பேதுரு 2:1,2) ஆகிய தடைகள் அகற்றப்படும் போது வேதத்திலிருந்து பெருமளவு நன்மை பெறலாம்.

**6. அறிவியுங்கள் (Relate)** : வேதத்திலிருந்து கற்றுக் கொண்டவைகளை பிறருடன் பகிர்ந்து கொள்ளுங்கள் (எஸ்றா 7:10). தேக்கம் வேண்டாம். கொடுக்கவே பெறுகிறோம். உரையாடல்கள், கடிதங்கள், பராமரிப்புக் குழுக்கள் மூலம் சத்தியங்களைப் பகிர்ந்து கொள்ளலாம். வயல் வெளிகளில் நடக்கும் போதும், பயணவேலைகளிலும் அல்லவா இயேசு அறிவித்த சத்தியங்களில் பெரும்பாலானவற்றைப் பகிர்ந்து கொண்டார். கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும் (லூக்கா 6:38; நீதி. 11:25,26).

**7. ஆராதியுங்கள் (Revere)** : வசன அறிவு யாவும் நம்மை ஆராதனைக்குள் நடத்த வேண்டும். வசனத்தில் தேவனை அறிவதே தேவனது வசனத்தை ஆராய்வதின் நோக்கமாகும். இந்த அறிவினால் ஆராதனை சிறப்பாகும் (சங். 138:2).



# மிஷன் ஊழியம்

## இயேசு கிறிஸ்து காண்பித்த மாதிரி

Rev. V. லாரன்ஸ் மனோஜ்குமார்
North West Missions Regional Director

விண்ணுலகை விட்டு மண்ணுலகிற்கு,"மாற்றுக் கலாச்சார மிஷனரியாக" முதலடி எடுத்து வைத்த உலக இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

கர்த்தரை அறிந்திராத பகுதிகளுக்கு சென்று, அவருக்கு சாட்சியாக வாழ்ந்து, அவரை அறிவிக்க, அவராலே அனுப்பப்பட்டு நிறைவேற்றப்படுகின்ற ஊழியம் மிஷன் ஊழியம் என்பது நாம் அறிந்ததே (அப்.1:8). பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன் என்று இயேசு கூறினார் (யோவான் 20:21 b). இத்தகைய ஊழியத் திட்டத்தினை கர்த்தர் தமது வார்த்தையில் அழுத்தமாக வெளிக்காட்டியுள்ளார் (மத்.28:19; மாற்கு 16:15; அப்.1:8; லூக்கா 24:47). இயேசு கிறிஸ்து எவ்வாறு தன் வாழ்க்கையில் இதனை நிறைவேற்றி காண்பித்தார்? கீழ்க்கண்ட பகுதியின் மூலமாக சிலவற்றை நாம் அறிந்து கொள்ளலாம்.

### 1. இயேசு ஒரு ஊழியத்தோடு வந்தார் (Jesus Came with a Mission)

இயேசு, பிதாவினால் கொடுக்கப்பட்ட ஒரு அதிமுக்கிய பணியோடு (மனுக்குல மீட்பு). அனுப்பப்பட்டு வந்தார். இன்னொரு விதத்தில் சொன்னால், இயேசு ஒரு நோக்கத்தோடு, ஜனங்களுக்காக விண்ணைவிட்டு மண்ணிற்கு மனிதனாக வந்தார். (Jesus came with a purpose, came for the people) அந்த நோக்கத்தினை இயேசுவே, "இழந்து போனதை தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்" என்றார் (லூக்கா 19:10). அவர் ஆரம்பித்த இந்த பணியின் நோக்கம் தமது சபையின் மூலமாக நிறைவு செய்யப்பட ஆண்டவர் விரும்புகிறார். இன்னமும் இயேசு கிறிஸ்துவை இரட்சகராக அறிந்திராக, அனுபவித்திராத கூட்டம் ஏராளமான உண்டு. அதனை உணர்ந்து செயல்பட. நமது திருச்சபைகளுக்கு கர்த்தர் அருள்புரிவாராக. எந்த ஒரு திருச்சபையும் மிஷன் ஊழிய செயல்பாட்டில் தன்னை ஈடுபடுத்தவில்லை என்றால், அந்த திருச்சபை கொஞ்சம் கொஞ்சமாக செத்துக் கொண்டிருக்கிறது என்று ஒரு பரிசுத்தவான் கூறினார்.

Emil Brunner என்பவர் சொன்னது 'The Church exists by Mission just as Fire exist by Burning' (எரிகிறதினால் நெருப்பு உயிர்வாழ்வது போல் சபையும் மிஷனரிப் பணியினால்தான் உயிர் வாழ்கிறது). அழியும் ஆத்துமாக்களை தேடி கிறிஸ்துவண்டை நடத்தும் உன்னத நோக்கத்தோடு, சேவை செய்யும் திருச்சபைகள் அதிகம் எழும்பட்டும்.

### 2. இயேசு தடைகளைக் கடந்தார் (Jesus Crossed the Barriers) யோவான் 4:4-34

இயேசு, ஒரு சமாரியப் பெண்ணுடன் பேசுவதையும், தாம் இன்னார் என்பதை அவளுக்கு வெளிப்படுத்துவதையும், அதனைத் தொடர்ந்து அந்த முழு கிராமமும் மேசியாவாகிய அவரை ஏற்றுக்கொள்வதையும் மேற்கூறிய வேதப்பகுதியில் வாசிக்கிறோம். இந்த சம்பவத்தில் இருந்து இயேசு எத்தகைய தடைகளை கடந்தார் என்பதை அறிய இயலும்.

யூதர்கள் சமாரியர்களோடு சம்பந்தங்கலக்கமாட்டார்கள். இயேசு கிறிஸ்து வாழ்ந்த காலத்தில், யூதர்கள், சமாரியர்களை, தங்களைவிட எல்லாவற்றிலும் தரம் குறைந்தவர்களாகவும், தீண்டத்தகாதவர்களாகவும் கருதினார்கள். பெண்களை இழிவாக நினைத்தார்கள். யூதர்களாகிய தங்களுக்கு எருசலேமில் தேவாலயம் இருந்தது. சமாரியர்களுக்கு இல்லை, யூதர்களாகிய தங்களின் வேதம் முழுமையானது. சமாரியர்களுடைய வேதம் அப்படியல்ல, என்கிற நிலையில் மதம் (Religion) சார்ந்த நிலையிலும் சமாரியர்களை தாழ்ந்தவர்களாக இழிவுப்படுத்தினார்கள். தவறான அபிப்ராயம், வெறுப்பு, பட்சபாதம் இருந்தது. இத்தகைய பின்னணியத்தில்தான் இயேசு தடைகளை எல்லாம் கடந்து சமாரியருடைய எல்லைக்குள் நுழைந்தார். வசனம் 4, 34-ன்படி, தம்மைக் குறித்த பிதாவின் சித்தம் இந்த சந்தர்ப்பத்திலே நிறைவேற வேண்டியதாய் இருந்தபடியால்- புறஜாதியார் மீது கரிசனையோடு தடைகளை தாண்டினார். மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட தடைகள்தான் கலாச்சார தடைகள் (Cultural Barriers) இனம் சார்ந்த தடைகள் (Racial Barriers), மதம் சார்ந்த தடைகள் (Religious Barriers). இத்தகைய தடைகள் அனைத்தையும் இயேசு கடந்தார். இயேசுவைப் பின்பற்றி, மற்றவர்கள் மீது கொண்டுள்ள தவறான அபிப்ராயங்களைக் களைந்துபோட்டு, மேற்சொன்ன தடைகளையும், மொழிசார்ந்த தடைகளையும் கடந்து சுவிசேஷத்தை அறிவிக்க, கர்த்தர் கிருபை தருவாராக.

### 3. இயேசு ஜெபிக்க கட்டளையிட்டார் (Jesus Commanded us to Pray)

லூக்கா 10:2-ல்.... "அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்" என்று இயேசு கூறினார். ஜெபம் இல்லாமல் மிஷனரிப் பணி துணியளவும் சாத்தியமாகாது. இதனை இயேசு அறிந்துதான் இத்தகைய வார்த்தைகளை கூறினார். மிஷனரிப் பணியை முன்னோக்கித் தள்ளும் ஒரு வலுமையான இஞ்ஜின் ஜெபம் என்று A.B.Simpson என்னும் பரிசுத்தவான் கூறியுள்ளார். தேவன் தந்த பாரத்தினால், பாரதத்தின் வரைபடத்தை வைத்து அழுது அழுது ஜெபித்ததின் விளைவினால் அல்லவோ வில்லியம் கேரி இன்று நவீன மிஷனரி ஊழியத்தின் தந்தை (Father of Modern Missions) என்று அறியப்பட்டுள்ளார். ஆகவே, மிஷனரி ஊழியங்களுக்காக, ஊழியர்களுக்காக, ஊழிய ஸ்தலங்களுக்காக செய்யப்படும் ஜெபங்களை ஒரு போதும் குறைத்து மதிப்பிட்டுவிடக் கூடாது!. இயேசுவின் வார்த்தைக்கு இணங்கி, தொடர்ந்து ஜெபிக்கும் அர்ப்பணத்தை அவர் நம்மில் தருவாராக. அறுவடைக்கு எஜமான் ஆட்களை அனுப்பவும், அனுப்பப்பட்டவர்கள் பாதுகாக்கப்படவும், வல்லமையாக பயன்படுத்தப்படவும், நாம் ஜெபிப்போமாக!.

### 4. போகும்படி இயேசு பணித்துள்ளார் (Jesus Commissioned us to Go)

யோவான் 20:21-ல்.... "நானும் உங்களை அனுப்புகிறேன் என்றார்" லூக்கா 10:3 "புறப்பட்டுப் போங்கள்" என்றார். மத்தேயு 28:19-ல் நீங்கள் புறப்பட்டுப்போய்.... சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள் என்றார். மாற்கு 16:15-ல் நீங்கள் உலகமெங்கும் போய் என்று கூறியுள்ளார். இந்த பிரதான கட்டளைக்கு கீழ்ப்படிந்து சென்று அநேகரை நமது மனக்கண்முன் கொண்டு வருவோமாக. அப்போஸ்தலனாகிய தோமாவில் இருந்து, பல நூற்றாண்டுகளில் நமது தேசத்திற்கு வந்து கண்ணீரும், இரத்தமும் சிந்திய பரிசுத்தவான்களின் வாழ்க்கையும், சாதனையும் நமக்குள் உற்சாகத்தையும், உத்வேகத்தையும், ஊக்கமாக முன்னேறி செல்லும். உறுதியையும் கொண்டுவரட்டும். பரமனைப் பறைசாற்றும் பரிசுத்தவான்களாய் பாரதமெங்கும், பாரதத்தைக் கடந்தும் பரிசுத்த பணிக்கென கடந்துபோக கர்த்தர் பெலன் தருவாராக.

# மிஷன் பிரயாணங்கள்

- அக்டோபர் மாதம் 16-ம் தேதி முதல் 23-ம் தேதி வரை Rev.T.R.ஜான் வின்ஸ்லி, Rev.S.தாமரைச் செல்வன், Rev.K.சுந்தர்சிங், Rev.டேவிட் ராஜா, Rev.ஜஸ்டின் பால் இன்பராஜ், Rev.ஏசுதாஸ் கென்னடி ஆகியோர் கொண்ட குழு மணிப்பூர் மற்றும் மிசோராம் மாநிலங்களுக்கும், அண்டை நாடான மியான்மருக்கும் சென்று அங்குள்ள மிஷனரிகள் மற்றும் சபை ஊழியர்களை சந்தித்து, உற்சாகப்படுத்தி வந்துள்ளனர்.
- அக்டோபர் மாதம் 15-ம் தேதி முதல் 21-ம் தேதி வரை சேலம் மண்டலத்தின் சார்பாக Rev.P.சாம்சன் பால், Rev.பிரான்சிஸ் மோகன், Rev.போவாஸ், Rev.ஜெபராஜ், Rev.ராபர்ட் ரமேஷ் ஆகியோர் கொண்ட குழு திரிபுரா மாநிலத்திற்கு சென்று ஊழியம் செய்து வந்துள்ளனர்.

மணிப்பூர், மிசோராம்



திரிபுரா



## மிஷன் கன்வென்ஷன்கள்

- 24.11.2019 அன்று திருப்பூர் மண்டலத்தின் சார்பாக மிஷன் கன்வென்ஷன் நடைபெற்றது. அதில் சுமார் 150 பேர் கலந்து கொண்டனர். Rev.T.R. ஜான் வின்ஸ்லி அவர்கள் தேவசெய்தி கொடுத்தார்கள்.
- 24.11.2019 அன்று செங்கல்பட்டு மண்டலத்தின் சார்பாக மிஷன் கன்வென்ஷன் நடைபெற்றது. 150 பேர் கலந்து கொண்டனர். Rev.J ஜேம்ஸ் ஆலமன் அவர்கள் தேவசெய்தி வழங்கினார்கள்
- 1.12.2019 அன்று பாளையங்கோட்டை மண்டலத்தின் சார்பாக மிஷன் கன்வென்ஷன் நடைபெற்றது. 350 பேர் கலந்து கொண்டனர். Rev.J சாமுவேல் ஜெபராஜ் அவர்கள் தேவ செய்தி கொடுத்தார்கள்.
- மண்டலத்தின் தலைமைப் போதகரோடு இணைந்து மிஷன் இயக்க பொறுப்பாளர்கள் இவ்வூழியங்களை சிறப்பான முறையில் ஒழுங்கு செய்திருந்தார்கள்.

பாளையங்கோட்டை



செங்கல்பட்டு



திருப்பூர்



## சமார் (இந்து) மக்களினத்திற்காக ஜெபியுங்கள்



மக்கள் இனம் : சமார், இந்து

மொழி : ஹிந்தி

மக்கள் தொகை : 4,93,97,000

கிறிஸ்தவர்கள் : 1.25%

அதிகம் வாழும் பகுதி : உத்திரபிரதேசம், மத்திய பிரதேசம், பீகார்.

நம்பிக்கை: சமார் மக்களினத்தவர்களில் அதிகமானோர் இந்துக்களாக உள்ளனர். சிவனை கடவுளாக வணங்கினாலும், ரவி தாஸ்-னுடைய போதனைகளை கடைபிடிக்கின்றனர். காலணிகள் சரிசெய்வதே இவர்களது முக்கியத் தொழிலாகும். தீண்டத்தகாதவர்கள் பட்டியலில் இடம் பெறுகின்றனர்.

தத்தெடுத்துள்ள மண்டலம் : மதுரை தெற்கு, கோவை தெற்கு

## மிஷனரிகளின் பணித்தள செய்திகள்

**1. பாஸ்டர். பார்தீபன், வல்சட், குஜராத்**: கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம், மான்சி என்ற சிறுமி, பல நாட்களாக பக்கவாத வியாதியினால் நடக்க முடியாமல் காணப்பட்டாள். அவளுடைய தாயார் அவளை சபைக்கு அழைத்து வந்தார். பாரத்தோடு ஜெபித்தோம். கர்த்தர் அந்த சிறுமிக்கு பரிபூரண சுகம் தந்து, அவளை நடக்கப் பண்ணினார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

**இந்த மிஷனரியை தாங்கும் சபை : பாஸ்டர். பெஞ்சமின் ஆதாம், மதுரை மேற்கு.**

**2. பாஸ்டர். சந்திப்சிங், பஞ்சாப்** : கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம். ஜூலிகான் என்ற சகோதரி தைராய்டு வியாதியினால் கஷ்டப்பட்டு வந்தார். மருத்துவம் பார்த்தும் சற்றாகிலும் குணப்படவில்லை. விசுவாசி ஒருவர் இயேசுவைப் பற்றி சொல்லி சபைக்கு அவரை அழைத்து வந்தார். அவரும் இயேசு சுகம் தருவார் என்று விசுவாசித்தார்கள். சபையாக சேர்ந்து ஜெபித்தோம். தேவன் அற்புதமாய் அந்த சகோதரிக்கு வியாதியிலிருந்து சுகம் தந்தார். மருத்துவர்கள் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். மாத்திரை மருந்து எதுவும் இனி சாப்பிட வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். சுகம் தந்த இயேசுவிற்கு நன்றி.

**இந்த மிஷனரியை தாங்கும் சபை : பாஸ்டர். மோகன் ராவ், அம்பத்தூர்.**

---

### பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும் உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்

**" Tamil District Council of SIAG "**

என்ற பெயரில் காசோலை அல்லது DD எடுத்து
பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு சென்னையில் உள்ள
நமது பொருளாளர் அலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

The Treasurer,
Tamil District Council of SIAG, E-17, Anna Nagar, Chennai - 600 102



# வசன தியானம்


## Rev. R. நெல்சன் ஞானகுமார்

இயக்குநர், கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியங்கள்.
மூத்த போதகர், திருவண்ணாமலை ஏ.ஜி. சர்ச்.


வேதாகமத்தை வாசிப்பது மட்டுமல்லாமல் வேத வசனங்களை தியானம் செய்ய வேண்டும். வேத வசனங்களை தியானம் செய்யும்போது அது உங்களுக்கான ஆவிக்குரிய உணவாக மாறும். உங்கள் உள்ளான மனிதனை பலப்படுத்தும். வேதாகமத்தை பல விதங்களில் தியானம் செய்யலாம். இப்போது ஒரு வசனத்தை எப்படி தியானம் செய்வது என்பதை பற்றி நடைமுறையில் கற்றுக்கொள்ளுங்கள். பின்பு உங்களோடு ஆண்டவர் பேசின வசனத்தை இதே முறையில் நீங்களே தியானம் செய்து பாருங்கள்.

**"அவனுடைய தேவன் அருளியவேதம் அவன் இருதயத்தில் இருக்கிறது, அவன் நடைகளில் ஒன்றும் பிசகுவதில்லை" சங்கீதம் 37:31.**

1. ஜெபம் பண்ணுங்கள் :

   மாதிரி ஜெபம் : ஆண்டவரே உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படி என் கண்களை திறந்தருளும் (சங்.119:18).

2. வசனத்தை சத்தமாய் ஒரு முறை வாசியுங்கள்.
3. வசனத்தை சத்தத்தை குறைத்து ஒரு முறை வாசியுங்கள்.
4. வசனத்தை சத்தமில்லாமல் மனதிற்குள் ஒரு முறை வாசியுங்கள்.
5. வசனத்திற்கு ஒரு தலைப்பு கொடுங்கள்.

   வேதத்தின் நன்மை, பிசகாத நடை, தேவன் அருளிய வேதம் போன்ற ஏதாகிலும் ஒரு தலைப்பு கொடுக்கலாம்.

6. வசனத்தை பல பிரிவுகளாக பிரியுங்கள்

   தேவன் அருளிய, வேதம், இருதயத்தில் இருக்கிறது, நடைகள், பிசகுவதில்லை.

7. மேலே கொடுக்கப்பட்ட பிரிவுகளிலுள்ள வார்த்தைகளுக்கு அதே அர்த்தமுள்ள வேறு வார்த்தைகளை யோசித்து எழுதுங்கள்

   - தேவன் அருளிய - கடவுள் கொடுத்த, கடவுளால் ஏவப்பட்டு எழுதப்பட்ட.
   - வேதம் - வசனம், வாக்கு, பிரமாணம், திருச்சட்டம், வார்த்தை, சத்தியம்.
   - இருதயத்தில் இருக்கிறது-மனதில் பதிந்திருக்கிறது, உள்ளத்தில் வைக்கப் பட்டுள்ளது. மனப்பாடம் செய்யப்பட்டுள்ளது.
   - நடைகள் - பாதங்கள், கால்கள், போகும் வழி.
   - பிசகுவதில்லை-சறுக்குவதில்லை, பாதை மாறுவதில்லை, வழி விலகுவதில்லை, தவறுவதில்லை, வழுக்குவதில்லை, தடுமாறுவதில்லை.

   நாம் கொடுத்த வேறு வார்த்தைகளைக்கொண்டே இந்த வசனத்தை சொல்லிப்பார்க்கும்போது வசனத்தைக் குறித்த ஒரு புதிய புரிந்துகொள்ளுதல் உண்டாகும்.

(உதா) “கடவுள் கொடுத்த வார்த்தை என் மனதில் பதிக்கப்பட்டுள்ளபடியால் நான் பாதை மாறுவதில்லை”

8. இதே வசனத்தை கற்பனை செய்து பாருங்கள். பட வடிவில் கொண்டு வந்து பாருங்கள் (VISUALIZE)

வேத வசனம் நம் இருதயத்தை நிறைத்திருக்கிறதைப் போல, நாம் பாவம் செய்யும்போது நாம் ஏற்கனவே இருதயத்தில் வைத்திருக்கிற வசனம் சிந்தனையில் வருவதை போலவும் நாம் பாதுகாக்கப்படுவதைப் போலவும் கற்பனை செய்து பாருங்கள்.

9. இதே வசனத்தை பல்வேறு தமிழ் மற்றும் ஆங்கில மொழி பெயர்ப்புகளில் எடுத்து வாசித்து பாருங்கள். வசனத்தை குறித்த இன்னும் ஒரு தெளிவு உண்டாகும்.

- The Law of his God is in his heart; none of his steps shall slide (American Standard )
- They remember God's teachings, and they never take a wrong step (Contemporary English)
- They keep the law of their God in their hearts and never depart from it (Good News Bible)
- The law of his God is in his heart; none of his steps shall slide (King James Version)
- The law of his God is in his heart; His steps do not slip (New American Standard)
- The law of his God is in his heart; his feed do not slip (New International Version)
- The teachings of God are in his heart, So he does not fail to keep them (New Century)
- கடவுளின் திருச்சட்டம் அவர்களது உள்ளத்தில் இருக்கிறது. அவர்களின் கால்கள் சறுக்குவதில்லை (பொது மொழி பெயர்ப்பு)

10. இந்த வசனத்திலிருந்து நீங்கள் கற்றுக்கொள்ளும் பாடம் என்ன?

வசனத்தை ஏராளமாய் நாம் இருதயத்தில் வைக்கும்போது நாம் வழி விலகாமல் நம்மை காத்துக்கொள்ள முடியும்.

11. இந்த வசனத்தை தியானித்த பிறகு நீங்கள் எடுக்கும் தீர்மானம் என்ன?

தினமும் ஒரு வசனமாகிலும் மனனம் செய்ய தீர்மானிக்கிறேன்.

12. கற்றுக்கொண்ட பாடத்தை கைக்கொள்ள நடைமுறைப்படுத்த ஜெபியுங்கள்.

ஆண்டவரே! என் இருதயத்தை வசனத்தினால் நிரப்ப உதவிசெய்யும்.

13. இந்த வசனத்திற்கு ஒத்த வேறு வசனங்களை எடுத்து வாசித்தால் இவ்வசனத்திற்கு கூடுதல் வெளிச்சம் கிடைக்கும் (சங். 119:11; யோபு 23:12).

சிறுவர் பகுதி



# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ

பாஸ்டர். பெவிஸ்டன்
பரமன்குறிச்சி, நாசரேத் மண்டலம்

ஹாய்.... வாங்க... வாங்க.... எல்லாரும் எப்படியிருக்கிறீங்க? 2020 புத்தாண்டு வாழ்த்துக்களுடன் உங்களை சந்திப்பதில் உண்மையில் மகிழ்ச்சியடைகிறேன். கடந்த ஆண்டுகளெல்லாம் நம்மை பாதுகாத்து பராமரித்த நம்ம இயேசப்பா இந்த ஆண்டும் நம்மை அற்புதமாய் நடத்துவார். நீங்க விசுவாசித்தால் மனசுக்குள்ள ஒரு ஆமென் சொல்லிருங்க பார்க்கலாம். வெரிகுட்....

கதை கேட்க ஆயத்தமா? நடந்த ஒரு உண்மை சம்பவத்தை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். நிலவில் முதன் முதலில் கால் வைத்தவர் நீல் ஆம்ஸ்ட்ராங் என்பது ஊரறிந்த உண்மை. ஆனால், உண்மையில் முதன் முதலில் நிலவில் கால் வைத்திருக்க வேண்டியவர் யார் தெரியுமா? பல பேருக்கு தெரியாது. அவர் தான் எட்வின் சி ஆல்ட்ரின் என்பவர்.

எட்வின் சி ஆல்ட்ரினா? அப்படியொரு பெயரை கேள்விப்படவே இல்லையேனு சொல்லுறீங்களா... உங்க மைன்ட் வாய்ஸ் புரியது. எட்வின் சி ஆல்ட்ரின் அமெரிக்காவின் விமான படையில் பல ஆண்டுகள் பணிபுரிந்தவர். விண்வெளியில் எப்படி நடக்க வேண்டும் என்று முறையான பயிற்சி பெற்றவர். இவருடைய அனுபவத்தையும் பயிற்சிகளையும் பாராட்டிய நாசா நிறுவனம் இவரை நிலவுக்கு அனுப்ப தீர்மானித்தது. அதன்படி இவரை நிலவுக்கு செல்லும் அப்பல்லோ விண்கலத்தின் பைலட்டாக நியமித்தார்கள். அதாவது விமானியாக நியமித்தார்கள்.

என்ன தான் அனுபவமும் பயிற்சியும் இருந்தாலும் நிலவிற்கு தனியாக அனுப்ப முடியாதே.. ஆகவே இன்னொருவரை அனுப்ப தேடியபோது சிக்கியவர் தான் நீல் ஆம்ஸ்ட்ராங்க். இவர் அமெரிக்காவின் கப்பல் படையில் வேலை பார்த்தவர். விமான படையில் முறையான அனுபவம் இல்லாதவர். ஆயினும் மிகுந்த தைரியசாலி என்பதால் இவரை இந்த பயணத்திற்கு தேர்ந்தெடுத்து அப்பல்லோ விண்கலத்தின் கோ-பைலட்டாக அதாவது இணை விமானியாக அனுப்பி வைத்தனர்.

இவர்கள் இருவரும் சென்ற அப்பல்லோ விண்கலம் நிலவை அடைந்ததும் நாசாவிலிருந்து, “பைலட் பர்ஸ்ட்” என்று கட்டளை பிறப்பிக்கப்பட்டது. கட்டளை பெற்றவுடன் நிலவில் இறங்க வேண்டும். ஆனால், ஆல்ட்ரினுக்கோ மனதில் சின்ன தயக்கம். இடது காலை எடுத்து வைப்பதா? வலது காலை எடுத்து வைப்பதா? என்றல்ல. “நிலவில் முதன் முதலில் கால் எடுத்து வைக்கிறோம். புவியீர்ப்பு விசையற்ற இடத்தில் இருக்கிறோம். கால் வைக்கும் இடம் எப்படியிருக்கும் என்று தெரியாது. புதை மணலாக இருந்து உள்ளே இழுத்துவிட்டால். எரி மணலாக இருந்து காலை சுட்டுவிட்டால்...” மணிக்கணக்காகவெல்லாம் தாமதிக்கவில்லை. தயக்கத்தில் சில நொடிகள் தான்... அதற்குள் நாசாவில் இருந்து இரண்டாவது கட்டளை பிறப்பிக்கப்பட்டது. “கோ-பைலட் நெக்ஸ்ட்....”

தேவனையும் பரிசுத்த வேதத்தையும் மிக அதிகமாக நேசிக்கும் நீல் ஆம்ஸ்ட்ராங் கட்டளை வந்த அடுத்த நொடி சற்றும் தாமதிக்காமல் காலடி எடுத்து வைத்தார். அந்த வினாடியே உலக வரலாற்றில் இடம் பிடித்தார்.

உலக வரலாறு, ஒரு நொடி தயக்கத்தில் மாற்றி எழுதப்பட்டது. திறமையும் தகுதியும் இருந்தும் கூட தயக்கத்தின் காரணமாக தாமதித்ததால் இன்று ஆல்ட்ரின் என்னும் கேப்டனை யாருக்கும் தெரியவில்லை. இனி நிலவை பார்க்கும் போதெல்லாம் இந்தச் சம்பவத்தை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். ஒரு நிமிட தயக்கம் நம்முடைய மிகப்பெரிய வெற்றிகளைத் தடுத்துவிடுகிறது.

அன்பு தம்பி தங்காய்.... நாம் எல்லாருக்குள்ளும் தேவன் மிகப் பெரும் சாதனைகளை படைக்கிற வல்லமையை கொடுத்திருக்கிறார். ஆனால் நம்முடைய தயக்கம், பயம், கூச்சம், தாழ்வு மனப்பான்மை இவைகளினால் கடந்த ஆண்டுகளில் பலமுறை வெற்றி வாய்ப்புகளை தவறவிட்டிருக்கிறோம். உண்மைதானே. நாம் அவசரப்பட வேண்டிய அவசியமில்லை. உணர்ச்சி வசப்பட்டு ஒரு செயலில் தலையிட வேண்டியதில்லை. சரியானதை செய்ய தயக்கம் எதற்கு? சரியானதை செய்ய தயங்கினால் நாம் தவறானதை தான் செய்து கொண்டிருப்போம். எனவே, நல்ல விஷயங்களில் தயக்கத்தையும் தாழ்வு மனப்பான்மையையும் தவிர்க்க தெரிஞ்சுக்கோ... தேவனால் தலைநிமிர்ந்து நிற்பாய் என புரிஞ்சுக்கோ.

“மனிதன் நிலவில் நடந்தான் என்பதைவிட சர்வ வல்லமை உள்ள தேவன் பூமியில் உலாவினார் என்பதே பெருமை” என்று நீல் ஆம்ஸ்ட்ராங் தனக்கு வந்த பெருமை புகழ் யாவற்றையும் தேவனுக்கு உரியதாய் மாற்றி தேவனை மகிமைப்படுத்தினார். இந்த புதிய ஆண்டில் உங்கள் வாழ்வில் தயக்கங்களை தவிர்த்து... நல்ல வாய்ப்புகளை பயன்படுத்தி, எந்நிலையிலும் தேவனை மகிமைப்படுத்த ஒரு தீர்மானம் எடுப்பீர்களா?

**என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு** (பிலி.4:13). இந்த வசனத்தை அறிக்கை செய்து தாழ்வு மனப்பான்மையை விரட்டுங்கள். இந்த ஆண்டு உங்களுக்கு ஆசீர்வாதமாக அமைவதாக. இந்த பகுதி குறித்த உங்களது மேலான கருத்துக்களை, சாட்சிகளை 97503 81784 என்ற எண்ணுக்கு குறுஞ்செய்தி அனுப்புங்க. அடுத்த இதழில் மற்றொரு சுவாரசியமான கதையோடு உங்களை சந்திக்கிறேன்... Byeee....

---

**தாங்கள் பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு செய்திகள், கவிதைகள், துணுக்குகள், கடிதங்கள், சாட்சிகள் யாவற்றையும் அனுப்பித் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்**

**நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

ஆசிரியர், **பரிபூரண ஜீவன்,**

43/3 ஆபிசர்ஸ் காலனி, புத்தூர், திருச்சி - 17

செல் : 94434 15484



# உன்னிமித்தம் உன் சந்ததியை ஆசீர்வதிப்பார்

**Rev. பெகின் சாமுவேல்**
(AGCM Director)

ஆண்டவரும், அருமை இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பரிபூரண ஜீவன் வாசகர்கள் அனைவருக்கும் தமிழ்ப்பிரதேச சிறுவர் ஊழியங்களின் சார்பாக புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த வருடம் முழுவதும் கர்த்தர் நம்முடைய சிறுவர் ஊழியங்களை ஆசீர்வதித்தார். இந்த ஊழியங்களை நேசித்து ஜெபிக்கிற, கொடுக்கிற, எல்லா விதத்திலும் எங்களோடு ஒத்துழைக்கிற, உற்சாகப்படுத்துகிற உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து இந்த புதிய வருடத்திலேயும் இந்த ஊழியங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

இந்த புத்தாண்டில் தேவன் உங்கள் பிள்ளைகளை ஆசீர்வதிக்க சித்தமாயிருக்கிறார். நீங்கள் தேவனுக்காக, அவருடைய ஊழியத்திற்காக செய்கிற காரியங்கள், அவருடைய சுவிசேஷத்தை அறிவிக்க எடுக்கிற பிரயாசங்கள், தேவன் மேலுள்ள அன்பினால் செய்கிற ஒவ்வொன்றையும் மறந்து விடுகிறதற்கு அவர் அநீதியுள்ளவரல்ல. உங்கள் பிரயாசத்திற்குரிய பிரதிபலனை தேவன் இவ்வருடத்தில் உங்கள் பிள்ளைகள் வாழ்க்கையில் நிறைவேற்ற இருக்கிறார்.

இதை ஒரு வேதாகம சம்பவத்துடன் விளக்குகிறேன். சவுலின் குமாரனாகிய யோனத்தானும், தாவீதும் மிகவும் நண்பர்களாயிருந்தனர். அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் உயிரைப் போல நேசித்தனர். சவுலும், யோனத்தானும் யுத்தத்தில் மரித்த பின்பு தாவீது தேவனால் முன்குறிக்கப்பட்டபடி, ராஜாவாக சிங்காசனத்தில் அமருகிறான். ராஜாவான தாவீது, தன்னுடைய சிநேகிதனாகிய யோனத்தானினிமித்தம் தான் தயை செய்கிறதற்கு அவனுடைய குடும்பத்தில் யாராகிலும் இருக்கிறார்களா? என்று தேடின போது இரண்டு காலும் முடமான மேவிபோசேத் என்ற யோனத்தானின் குமாரன் அழைத்து வரப்படுகிறான்.

மேவிபோசேத் ஐந்து வயதாயிருக்கும் போது அவனுடைய தகப்பனாகிய யோனத்தானும், தாத்தாவாகிய சவுலும் மரித்த செய்தி வந்தபோது, அவனுடைய தாதி அவனைத் தூக்கி கொண்டு ஓடும்போது அவசரத்தில் விழுந்து அவன் முடவனானான். எல்லாராலும் மறக்கப்பட்டு, முடமான, ஒளிந்து வாழ்ந்து கொண்டிருந்த மேவிபோசேத்துக்கு அவனுடைய தகப்பனாகிய யோனத்தானினிமித்தம் ராஜ அரமனையில் தாவீதோடு அமர்ந்து பந்தியிருக்கும் பாக்கியம் கிடைத்தது. 'உன் தகப்பனாகிய யோனத்தான் நிமித்தம் நான் நிச்சயமாய் உனக்குத் தயை செய்து, உன் தகப்பனாகிய சவுலின் நிலங்களையெல்லாம் உனக்குத் திரும்பக் கொடுப்பேன். நீ என் பந்தியில் நித்தம் அப்பம் புசிப்பாய்' (2சாமு.9.7). இந்த மேன்மை கிடைப்பதற்கு மேவிபோசேத் எதுவும் செய்யவில்லை.

**ஏன் தகப்பனாகிய யோனத்தானினிமித்தம் இந்த மேன்மை? யோனத்தான் எப்படிப்பட்டவன்?**

**1. தாவீதை மிகவும் நேசித்தான் :** 2 சாமு.1:26-ல் வாசிக்கும் போது தாவீது யோனத்தான் தன்னை எப்படி நேசித்தான் என்பதை கூறுகிறார். மிகவும் அதிகமான சிநேகம் அது. அன்பான பெற்றோர்களே, நீங்களும் இன்று தேவனை மிகவும் அதிகமாய் நேசித்தீர்களானால் உங்கள் நிமித்தம் உங்கள் பிள்ளைகளுக்கு தயவு செய்யப்படும்.

**2. தாவீதோடு உடன்படிக்கை பண்ணினான் :** 1சாமு.20:15,16 வசனங்களில் வாசிக்கும் போது நீர் உமது தயவை என் வீட்டை விட்டு அகற்றிவிடாமலும் இருக்க வேண்டும் என்று தன்னுடைய குடும்பத்தின் பாதுகாப்பிற்காக தாவீதோடு உடன்படிக்கை பண்ணினான். கர்த்தரோடு நாமும் உடன்படிக்கை பண்ணினால் தேவன் அதிலிருந்து மாறாதிருப்பார். (எரே. 31.31, ஏசா.54.10)

**3. தாவீதோடு ஒன்றாயிருந்தான் :** யோனத்தானுடைய ஆத்துமாவும், தாவீதுடைய ஆத்துமாவும் ஒன்றாய் இசைந்திருந்தது என்று 1சாமு.18.1-ல் வாசிக்கிறோம். இரண்டு பேருக்குள்ளும் எந்த முரண்பாடான கருத்துக்கள் கிடையாது. தாவீதுதான் தன்னுடைய தகப்பனுக்கு பிறகு ராஜாவாகப் போகிறான் என்பதை அறிந்தும் அவனை வெறுக்கவில்லை. அவனை மிகவும் நேசித்தான். தன்னுடைய இடத்தை அவன் பறிக்க போகிறானே என்ற எண்ணம் அவனிடம் எவ்வளவேனும் இல்லை.

பிதாவாகிய கர்த்தரும் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவும் ஒன்றாயிருக்கிறார்கள். நாமும் கிறிஸ்துவில் ஒன்றாயிருப்போம். கிறிஸ்துவிலிருந்த சிந்தையே எப்பொழுதும் நம்மிலும் இருக்கக்கடவது.

கிறிஸ்துவோடு நமக்கு உள்ள ஐக்கியம், அன்பு இவைகளை வைத்தே தேவன் நம்முடைய பிள்ளைகளுக்கு தயவு செய்வார். நம்முடைய பிள்ளைகளைப் பார்த்து தேவன், உன் தகப்பனாகிய அல்லது உன் தாயாகிய இவர்களினிமித்தம் நான் உனக்கு தயை செய்தேன் என்று ஆசீர்வதிக்கும் அளவிலான வாழ்க்கை நாம் வாழ்கிறோமா? என்று சிந்தித்து பார்ப்போம். இந்த புதிய வருடத்தில் தேவனோடு நல்ல ஐக்கியமுள்ள வாழ்க்கை வாழ தீர்மானிப்போம். தேவன் நம்மையும், நம்முடைய பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பார்.

---




## DYNAMIC EVANGELISM OF THE EARLY CHURCH

The dynamism of evangelism lies in the little word, “EVERY.” This small word causes an oceanwide difference between today’s evangelism and that of the early church. The greatest multiplication factor of the early church was “EVERY.” Let’s look at a few examples of this concept.

### EVERY CHRISTIAN

Unless every born-again Christian throws himself / herself into the task of evangelism, our city, state or nation can never be evangelised. God needs every one of us. Every Christian should reach every non-Christian. It is a total involvement of the Church. Every Christian is a missionary and every non-Christian a mission-field. In the early church, all the scattered ones preached the gospel (Acts 8:4). God wants all of us to be a soul winner! Don’t think it is impossible for you to evangelise India. When did God ask man to do a possible thing? He always demanded the impossible. He expected the stammerer Moses to speak to Pharaoh. He sent the young David to kill Goliath. If we have to do what we can do, we don’t need the Holy Spirit. The Holy Spirit is given to us so we can do what we cannot do.

### EVERYDAY

Next comes the everyday thrust. Christians must be on their toes if they really care for souls. Don’t dream about tomorrow, do it today. Today is ours. Never forget to add a sentence to your morning prayer, “Lord, give me a soul today.” Then act on it. We pray, “Give us this day our daily bread” and then cook our meals. That is faith in action. After praying for a soul a day, be on the look-out for an opportunity or create one. Souls were added to the early church “daily.” But for us soulwinning has become a sentimental Sunday affair. Jesus was a “daily” man (Luke 19:47); and so were the apostles (Acts 5:42). Their church was a daily ministering church (Acts 6:1). What was the outcome? “Churches increased in number daily” (Acts 16:5). Daily witnessing by individuals leads to the daily growth of the Church.

### EVERYWHERE

Then the everywhere push! If you claim every promise in the Bible you must claim Acts 1:8 too. Those who were scattered by persecution went “everywhere” preaching the Word. When someone was martyred, the one who kept the clothes was converted. If thrown in prison, the prisoners were converted. When dragged before authorities, the authorities were converted. Anywhere and everywhere, unrestrained witnessing was the key to their success.

Everywhere means where? Go out quickly (not slowly) into the streets, lanes, highways and hedges to the poor, maimed, lame and blind and compel them to come in (Luke 14:21-23). Mark it out in your Bible. This is where we are supposed to go. In our own language—win souls under the tree, in the bus, in the train, your door step, bus-stand, railway-station, schools, colleges, hospitals, offices—anywhere, everywhere! "And they went out and preached everywhere" (Mark 16:20). If the Church had stayed in the upper room, today we'll be in the deepest gloom!

## EVERY CREATURE

"Go into all the world and preach the gospel to every creature" (Mk 16:15). How did the early disciples accomplish this? They spoke to any one they came across, be it lame, blind, children, prisoners, Jews, Gentiles, beggars, lepers, kings! Historically Christianity is a person-to-person religion. Jesus said, "You shall be witnesses to Me" (Acts 1:8). We received power but we are anything but witnesses to Him. We must be like live wires conducting the power of Christ to anyone who comes in contact with us. I believe every person we meet is by divine appointment.

## EVERYWAY

Paul said that he became all things to all men that he might save a few (1 Cor. 9:22). Adopt as many methods as possible to bring souls to Christ. Be regular in your family prayer that the members of the family may be converted. Visit unsaved relatives whenever and wherever possible and share the gospel. Start distributing good tracts. Concentrate on gaining many non-Christian friends. Attend their weddings and funerals. Be friendly with all, irrespective of caste and creed. Wear a smile all the time for the rich and poor, young and old, learned and illiterates. Have a friendly word for anyone. Stop condemning and criticising teenagers for their hair style and fanciful dresses. Rather extend a broad smile and a warm hand-shake. Gather the neighbourhood children in your house and teach them songs and Bible stories. Do not hesitate to lend a helping hand to the vegetable vendor struggling to lift his basket. Help anyone anywhere. Keep thinking of novel methods and don't hesitate to practise it when God gives an idea. Be ready to spend some money. Collect old clothes and give to the poor. Invite friends to gospel meetings. Visit the nearby hospitals and console the sick and pray for them. Invite people to the church. Preach, sing, teach, and write. Somehow win some souls. Be versatile. Don't be crying and praying for spiritual gifts all the time. Keep doing things for God and the gifts will manifest.

## ஒவ்வொரு சபையும் மிஷனரி சபையானால்!!!

பாஷைகள் தேசங்கள் அனைத்தையும் தாண்டிட
கஷ்டப் பாடுகளை அன்போடு (கிறிஸ்துவோடு) சகித்திட
உருவாக்கிடும் எப்பொழும் தேவனை சார்ந்திட
ஒவ்வொரு சபையும் மிஷனரி சபையானால்!

மிஷனரி ஊழியத்தை, கொடுத்து தாங்கிடும்
உருவாக்கிய மிஷனரிகளை தேசங்களுக்கு அனுப்பிடும்
அவ்ஊழியத்திற்காக திறப்பில் நின்றிடும்
ஒவ்வொரு சபையும் மிஷனரி சபையானால்!

ஒரே குமாரன் இயேசுவை போலவே
மிஷனரி ஊழியத்தை செய்து காட்டிட
சுவிசேஷ பாரத்தை நம் உள்ளத்தில் வைக்கும்
ஒவ்வொரு சபையும் மிஷனரி சபையானால்!

சகோ. சீமா லூக்காஸ், மதுரை

---

## 2019-ம் ஆண்டு வேதவினாப் போட்டியில் தவறாமல் பங்குபெற்று சரியான விடை எழுதியர்கள் 83 பேர். அவர்களில் குலுக்கல் முறையில் 5 நபர்களை தெரிந்தெடுத்துள்ளோம்

1. மெர்லின் ஹெலன் பிரீத்தியா
W/o செல்வபிரியன்
க.எண்.5, பிளாட் எண்.15
தனி அபார்ட்மெண்ட்
முதல் யூனியன் கார்பிட் காலனி
உள்ளாகரம், சென்னை - 91

2. சாராள் அறிவுச்செல்வி
எண்.9; காமராஜ் தெரு
மரக்காணம் ரோடு
திண்டிவனம் - 1

3. ஜேஸ்மின்
W/o. குமார்
மிராக்கிள் ஏ.ஜி. சபை
9-84-1 விஷ்னுபுரம்
இறச்சகுளம் (போஸ்ட்)
நாகர்கோவில்,
கன்னியாகுமரி - 901

4. S. மாலதி
இடப்பாடி ஏ.ஜி. சபை
இடப்பாடி

5. ஜெயசீலி
திசையன்விளை

## போட்டி எண் : 80 சரியான விடைகள்

1.செவியைத்; 2.தயாளன்; 3.இரட்சிப்பையும், மகிமையையும், 4.ஆயிரமும்,பலத்த ஜாதியுமாவான்; 5. நீதி, முன்னாலே; 6.கீழே, மேலே; 7.மிருதுச்செடி; 8.கெம்பீரிக்கும்; 9.எப்சிபா, பியூலா; 10.பொக்கிஷம்; 11.தீட்டானவர்கள்; 12.அண்ணகனும், பட்டமரமென்று; 13. நீதியினால், கொடுமைக்குத்; 14.மகிமையை; 15.இரட்சிக்கப்படுவீர்கள்; 16.ஊழியக்காரர், கெம்பீரிப்பார்கள்; 17.பாதாளம்; 18.புல்,பூ; 19.கூவிக்கொண்டிருக்கிறோம்; 20.துன்மார்க்கருக்குச்; 21.கொலையுண்டவர்கள்; 22.பேல்,நேபோ; 23.நீதிகளெல்லாம்; 24.அமரிக்கையும், நம்பிக்கையுமே, 25.கையினால் வாய்க்கும்; 26. நீதியையும், கிரியைகளையும்; 27.வியர்த்தமும், வீணுமாம்; 28.ஞானமும், அறிவுமே; 29.மலைகளையெல்லாம்; 30.சிங்கம், துஷ்டமிருகம்.

## போட்டி எண் : 80 (சரியான விடை எழுதியவர்கள்)....

**செங்கோட்டை**: R.மயில்; கந்தையா; ராதாமணி; C.லீதியாள்; பியூலா; மாரிமுத்து தாவீது; S.முத்துலெட்சுமி; மகேஸ்வரி;கிரிஜா; எஸ்தர்கலா; T.கலா; G.முத்துலெட்சுமி; E.கலா; T.ரம்யா; S.ஜெயா; T.சாந்தி; புஷ்பவல்லி; டோரா; சுமதி;| **கடையநல்லூர்** : ஸ்டெல்லா; நளினி; தங்கராஜ்; ராணி; ஜெபசீதாலெட்சுமி; ஆஷாதேவி; வினோலியா; **ஸ்ரீவில்லிபுத்தூர்** : கிருபா; பாஞ்சாலி; கண்மணி; நித்யா; அனிதா; குளோரி; ஆபிரகாம்; ஞானம்; நாச்சியார்; கிறிஸ்டிபிரியா; தேவபிரியா; மெசி; சத்யா; | **மதுராந்தகம்** : வேதமணி; நேசம்; கிரேஸ் பியூலா; சாந்தி; பிரின்ஸி; சுனிட்டா ரோஸ்லின்; | **விருத்தாசலம்** : டேனியல்; பால்; பெஞ்சமின்; காபிரியேல்;| **அந்தமான்** : விஜய்; சலோமி; சத்தியா; தங்கமணி; ஜெயந்தி; ஸ்டெல்லா மேரி; ஜெனிபர்; ஜேக்லின்; | **தேனி** : தனம்; தீபா; ஞானபிரகாஷ்; கிருபா; திரவியச்செல்வி; |**இறச்சகுளம்**: பேபி; கனகமணி; அமலா; ஜேஸ்மின்; |**பரமத்திவேலூர்** : பாமா; சுமதி; சௌமியா; திருச்செல்வி;| **ஒட்டப்பிடாரம்** : சரஸ்வதி; சுப்ரமணியன்; பானுமதி; இஸ்ரவேல் கிருபாகரன்; |**புளியங்குடி** : ஜெயமணி; ஞானமணி; சுந்தரி; |**கிச்சிப்பாளையம்** : ராணி; எஸ்தர்; தீபா; |**வந்தவாசி** : அபிஷா சுமதி; தயா பிரெய்சி; விஜயா; |**கோவை** : மேரி டென்சில்; நிர்மலா; கிறிஸ்டினா அபிகாயில்; **பெருங்குளம்** : ஜெபாராஜா; பியூலா ஜோபாய்; ஜெயலின்; |**இராமன்புதூர்** :அன்னம்மாள்; பிரேமா; லீதியாள்; **நாசரேத்**: தாசன்மோசஸ்; பரிபூரணம்; எஸ்தர்; |**நாகமலை** : விஜிலா; மரியரூபி பிளாரன்ஸ்; ஹில்டா எலிசபெத்; |**திருச்சி** : கிறிஸ்டி மகாலஷ்மி; மேரி சுஜாதா;| **ஆறுமுகநேரி** : கஸ்தூரி; சுகிர்தா; **தர்மபுரி** : ரூத் : ஜாஸ்மின்; **சென்னை** : நித்யா; மெர்லின் ஹெலன் பிரித்தியா;| **மதுரை** : மேரி; எஸ்தர்; |**ஆண்டிபட்டி** : ஹெலன்; மேரி; |**ஓசூர்** : தனம்; எமிமாள்; |**அச்சிறுப்பாக்கம்** : பிளஸ்சன்; பிளஸ்ஸி; |**திசையன்விளை** : ராணி; ஜெயசீலி;| **KTCநகர்** (தி): பிரேமா ரூத்; சில்வியா;| **எடப்பாடி** : சுதா; ரூத்; **காரைக்கால்**; ராஜாமணி; உமா; |**பரமன்குறிச்சி** : செல்வி; சாராள்; |**பாளையங்கோட்டை** : ராம்ரெபெக்கா; லீலா;| **திண்டிவனம்** : சாராள் அறிவுச்செல்வி; ஜெசிந்தா; |**கிருஷ்ணகிரி** : ஆனி சரண்யா; ஆனிமேரி;| **மடத்துக்குளம்** : ஜீன்மேரிலின் கிருபா; |**குற்றாலம்** : வேளாங்கனி;| **சிட்லப்பாக்கம்** : ஜோதி; |**பேயன்விளை** :பிரேமா; |**நெல்வாய்** :அமலாவேணு;| **வேலூர்** : கிருபாகரன்; |**அகஸ்தியர்பட்டி** : பத்மாவதி;|**T.N.பாளையம்:** சுஜா;| **திருக்கோயிலூர்** : ஆரோக்யமேரி; **மண்ணிவாக்கம்** : பிளாரன்ஸ்;|**தூத்துக்குடி**: சில்வெஸ்டர்; |**இட்டமொழி** : பாப்பாமேரி; |**ஏர்காடு** : ரேச்சலின்; |**திருவள்ளூர்** : வில்லியம் மார்டின் லூதர்; |**கொங்கத்தான்பாறை** : சந்திரா; |**பூண்டி** : அமுதா; **அவனாசி** : தீபா; **கோவில்பட்டி** : உஷா; |**திருநின்றவூர்** : அம்மு;| **குரோம்பேட்டை** : ரெபெக்காள்; |**அரும்பாக்கம்** :மேரி; |**ஆலங்குளம்** (வி) கிருபா;| **வல்லம் (த)** : விஜி; |**புதுவை** : குப்பம்மாள்; |**மாதவாக்கம்** (செ) பியூலா;| **கடலையூர்** : ஆபிரகாம்; |**பழனி** : சாந்தி;| **காட்பாடி** : பால்பிச்சமுத்து;| **பெரியகோட்டை** : வசந்தா;|**பெங்களூர்** : தேவபிரியா; |**சாத்தூர்**: ஸ்டீபன் செல்வராஜ்; |**வத்ராப்** : அருள்செல்வி;|**கீழ்வேளூர்** : கிரேனாப்பு; |**வேப்பம்பட்டு** : ராஜேஸ்வரி; |**திருப்பத்தூர்** : ரூத் தெய்வனாய்;| **ஆழ்வார்திருநகரி** : பனிமலர்;| **கும்பகோணம்** : மீனா; |**ஆம்பூர்** : ரூபி; |**கொட்டிவாக்கம்** : அமுதவல்லி;| **திருநெல்வேலி** : தெரசா.

## பரிபூரண ஜீவன் போட்டி எண் – 81

**எரேமியா (1-25) இருப்பிடத்துடன் விடை எழுதவும்**

1. எது தன் வேளையை அறியும்?
2. எது கூர்மையாக்கப்பட்ட அம்பு?
3. எது மெய்யே?
4. எது வீணாயிருக்கிறது?
5. எது ஒழுங்கின்மையும், வெறுமையுமாயிருந்தது?
6. எது தேசமெங்கும் பரம்பிற்று?
7. எது கள்ளர் குகையாயிற்று?
8. எது கர்த்தருடைய சிங்காசனம் என்பார்கள்?
9. எது பொய்யே?
10. எது துன்மார்க்கருடைய தலையின்மேல் உக்கிரமாய் மோதும்?
11. எது பிராணன் மட்டும் எட்டுகிறது?
12. எது பூமியின் கடையாந்தரமட்டும் போய் எட்டும்?
13. எது நன்மையை வரவொட்டாதிருக்கிறது?
14. எது வடக்கேயிருந்து தோன்றுகிறதாயிருக்கிறது?
15. எது வலுசர்ப்பங்களைப்போல் காற்றை உட்கொள்ளுகிறது?
16. எது திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது?
17. எது குயவன் கையிலே கெட்டுப்போயிற்று?
18. எது அக்கினியைப்போலும், கன்மலையை நொறுக்கும் சம்மட்டியைப் போலும் இருக்கிறது?
19. எது தாங்கள் வரத்தக்க காலத்தை அறியும்?
20. எது பட்சித்துக் கொண்டிருக்கும்?
21. எது சுற்றிலுமுள்ள யாவையும் பட்சிக்கும்?
22. எது வெந்தது?
23. எது மனுஷனுடைய அரைக்குச் சேர்க்கையாயிருக்கிறது?
24. எது இருப்புக்காளவாய் என்று சொல்லப்படுகிறது?
25. எது முட்டையிட்டு அவயங்காத்தும் குஞ்சு பொரிக்காமற்போகும்?

| | |
|---|---|
| விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 05.02.2020 | சரியான விடை எழுதி அனுப்புகிறவர்கள் தங்கள் முழு முகவரியுடன் விடையை எழுதி அனுப்பவும். |



**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**


**"பரிபூரண ஜீவன்"**
**Sis.சாந்தி பால், W/o. Rev. பால் பிரகாசம்**
A.G. Church, 23- மெயின்ரோடு,செங்கோட்டை - 627 809
செல்: 88077 18002

# சங்கை. ஆதாம் துரை ஒரு சகாப்தம்



23.11.1929 - 1.12.2019

நமது ஏ.ஜி. ஸ்தபானத்தின் தமிழ் பிரதேசத்தில் தங்க தலைவர்களில் ஒருவரான சங்கை.ஆதாம் துரை அவர்கள் 1929-ம் ஆண்டு நவம்பர் மாதம் 23-ந் தேதி நெடுவயல் அச்சம்புதூர் என்ற கிராமத்தில் திரு.சீனிமுத்து-திருமதி.வெள்ளையம்மாள் தம்பதியினருக்கு மூன்றாவது பிள்ளையாக பிறந்தார். CMS சபையோடு பெற்றோர் அங்கம் வகித்தபடியால், பாஸ்டர்.ஆதாம் துரை அவர்களுக்கு சிறு வயது முதல் ஆலயத்திற்கு சென்று கர்த்தரை ஆராதிக்கும் பழக்கம் இருந்தது.

1949-ம் ஆண்டு டிசம்பர் 18-ம் தேதி சங்கை. ஆதாம் துரை அவர்கள் எட்வர்ட்ஸ் மிஷனரி மூலம் ஞானஸ்நானம் பெற்றார்கள். 1950ம் ஆண்டு மதுரை வேதாகமக் கல்லூரிக்கு படிக்கச் சென்றார்கள். 1953ம் வருஷம் மார்ச் மாதம் படிப்பை முடித்து புளியங்குடி சபை பொறுப்பேற்றார்கள். 1953ம் வருஷம் ஜூலை மாதம் 8ந் தேதி சகோதரி. குளோரி அவர்களை திருமணம் செய்தார்கள். 1956 முதல் 1958 வரை கணக்கபிள்ளை வலசையில் ஊழியம் செய்தார்கள்.

1959ம் வருஷம் கோவில்பட்டிக்கு வந்து, சவாலாக இருந்த ஊழியத்தை பொறுப்பெடுத்து சிறப்பாக செய்தார்கள். 60 ஆண்டுகளில் சபை 5 குடும்பங்களிலிருந்து 3000 பேர் பங்கு பெறும் சபையாக வளர்ச்சியடைந்தது. கோவில்பட்டியில் ஒரு பெரிய ஆலயத்தைக் கட்டவும், சுமார் 6000 பேருக்கு ஞானஸ்நானம் கொடுக்கவும் தேவன் அவர்களை பயன்படுத்தினார். தேவன் அவர்களுக்கு கொடுத்த நான்கு பிள்ளைகளும் பல்வேறு நிலைகளில் தேவனுக்கு ஊழியம் செய்து வருகிறார்கள்.

சங்கை.ஆதாம் துரை அவர்கள் மூன்று ஆண்டுகள் தமிழ்ப் பிரதேச பொருளாளராகவும், ஒரு ஆண்டு தலைவராகவும், 22 ஆண்டுகள் உதவித் தலைவராகவும் பொறுப்பு வகித்தார்கள். இப்படி பல்வேறு நிலைகளில் கர்த்தருடைய ஊழியத்தை சிறப்பாகச் செய்து நம்முடைய ஸ்தாபத்தின் வளர்ச்சிக்கும் நலனுக்கும் பேருதவியாக இருந்த சங்கை. ஆதாம் துரை அவர்கள் 1.12.2019 அன்று தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசித்தார்கள்.

Registered News Paper Regd. No. 8206 / 62




வடஇந்திய SFC முகாம்











BOOK POST

If Undelivered please return to
PARIPOORANA JEEVAN
30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 2301165